பக்கங்கள் எட்டு
விலை ரூபா: 5.00

# வலம்புரி
VALAMPURI

சங்கு 01 வள்ளுவர் ஆண்டு 2031 கார்த்திகை 09 வெள்ளிக்கிழமை (24-11-2000) தொ. பேசி 3378 ஒலி: 340

லாலா சோப்
சன்சயின் சோப்
விநியோகஸ்தர்
V. S. M. ஸ்ரோர்ஸ்
அந்தோனியார் வீதி
மானிப்பாய்
லாலாசோப் அச்சுவேலி
(கி. 1045)

## நீண்டகால யுத்தத்தினால் அரசும் விடுதலைப்புலிகளும் களைப்படைந்துள்ள நிலையில்..

# இனப் பிரச்சினைக்கான தீர்வில் சமாதானம் ஏற்பட வாய்ப்புண்டு

## பத்திரிகையாளர் மத்தியில் ஹெயின்

(நமது நிருபர்)

நீண்டகாலமாக நடைபெற்றுவரும் இனயுத்த அழிவுகளினால் களைப்படைந்த நிலையில் இலங்கை அரசும், தமிழீழ விடுதலைப் புலிகளும் உள்ளனர் இந்நிலையில் அரசுக்கும், விடுதலைப்புலிகளுக்கும் இனப்பிரச்சினையைத் தீர்க்கவேண்டிய நிர்ப்பந்தம் இப்போது ஏற்பட்டுள்ளது.

இந்த நிர்ப்பந்த நிலையை இருதரப்பினரும் கைவிட்டால் அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் வேறு உபாயம் இல்லை.

இவ்வாறு இலங்கை வந்துள்ள பிரிட்டிஷ் வெளிவிவகார அமைச்சர் பீற்றர் ஹெயின் பத்திரிகையாளர் மத்தியில் நேற்று உரையாற்றும்போது தெரிவித்துள்ளார்.

பிரிட்டிஷ் வெளிவிவகார அமைச்சர் பீற்றர் ஹெயின் நேற்று மாலை கொழும்பில் செய்தியாளர் மாநாடு ஒன்றை நடத்தினார்.

இச் செய்தியாளர் மாநாட்டில் பீற்றர் ஹெயின் கருத்துத் தெரிவிக்கையில்:

**மாநில சுயாட்சிக்குப் புலிகள் தயார்!**

இலங்கையின் மிக முக்கியமான நெருங்கிய நண்பனாக பிரித்தானியா எப்பொழுதும் இருக்கும்.

தமிழீழ விடுதலைப்புலிகள் மாநில சுயாட்சியை ஏற்படுத்தத் தயாராக இருக்கிறார்கள் என அறிகிறோம். அரசாங்கமும் ஐக்கிய இலங்கைக்குள் தீர்வுகாணத் தயாராக இருப்பதாகக் கூறுகிறது இந்நிலையில் இனப்பிரச்சினைக்கான தீர்வு சாத்தியமாக இருப்பதாகத் தெரிகிறது.

**இனவாத அமைப்புக்கள் பற்றி**

→ 8ஆம் பக்கம் பார்க்க

## வன்னிப் பகுதியில் மாவீரர் தின நிகழ்வு

(வவுனியா)

வன்னியில் இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திலும், இராணுவக் கட்டுப்பாடற்ற பிரதேசங்களிலும் மாவீரர் தின நிகழ்விற்கான ஆயத்தங்கள் செய்யப்பட்டுவருவதாக வன்னிச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இப்பிரதேசங்களில் சிவப்பு மஞ்சள் நிறக்கொடிகள் பறக்க

→ 8ஆம் பக்கம் பார்க்க

## விமானப்பயணப் பதிவுகள் இன்று இடம்பெறும்

(யாழ்ப்பாணம்)

விமானமூலம் வெளிமாவட்டங்களுக்கு செல்லும் பயணிகள் தமது பயணப் பதிவுகளை இன்று முதல் மேற்கொள்ள முடியுமென 'ரான் இணைப்பாளர் எஸ். குகராஜன் தெரிவித்துள்ளார்.

விமானத்தில்பயணம்செய்ய முன்னுரிமைபெற்ற நோயாளர்கள், அவர்களின் உதவியாளர்கள், அரச உத்தியோகஸ்தர்கள், அவசர காரியங்களுக்காக வெளிமாவட்டங்களுக்கு செல்லவுள்ளோர் தமது பயணப் பதிவுகளை இன்று காலை 8 மணிமுதல் 12-30 மணி வரை மேற்கொள்ள முடியுமென அவர்

→ 8ஆம் பக்கம் பார்க்க

## விமானசேவை இன்றுஇடம்பெறும்

[யாழ்ப்பாணம்]

பலாலிக்கும் இரட்மலானைக்கும் இடையிலான பயணிகள் விமான சேவை இன்று வெள்ளிக்கிழமை இடம் பெறு

→ 8ஆம் பக்கம் பார்க்க

## நோர்வேயின் விஷேட தூதுக்குழு இந்திய தலைநகருக்கு சென்றது!

### இனப்பிரச்சினை குறித்து ஆராய்வர்

[கொழும்பு]

இலங்கையில் சமாதானத்தை ஏற்படுத்தி, இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதில் முனைப்புடன் செயற்பட்டு வரும் நோர்வே அரசின் பிரதிநிதி எரிக்ஷோல் ஹைய்ம் தலைமையிலான குழுவினர் நேற்று முன்தினம் இந்திய தலைநகர் டில்லிக்கு திடீர் விஜயமொன்றினை மேற்கொண்டுள்ளனர். சமாதானத்தை ஏற்படுத்தும் வழிகளின் அடிப்படையாக ஜனாதிபதி சந்திரிகாவுடனும் விடுதலைப் புலிகளின் தலைவர் [8ஆம்பக்கம் பார்க்க

## 38 ஈழ அகதிகள் தமிழகம் சென்றனர்

(சென்னை)

இலங்கையைச் சேர்ந்த 38 தமிழ் அகதிகள் நேற்று அதிகாலை தனுஷ்கோடியைச் சென்றடைந்தனர்.

→8ஆம் பக்கம் பார்க்க

## யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் பொறுப்புடன் செயற்பட வேண்டும்!

### ஆர்ப்பாட்டம்குறித்து திரிலோகன் அறிக்கை

[யாழ்ப்பாணம்]

யாழ். பல்கலைக்கழக மாணவர்களால் நேற்று முன்தினம் நடத்தப்பட்ட கண்டனப் பேரணி தொடர்பாக வலிகாமம் மேற்கு பிரதேச சபைத்தலைவரும், ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் வட்டுக்கோட்டைத் தொகுதி அமைப்பாளருமான ந. திரிலோகநாதன் அறிக்கை ஒன்றை விடுத்துள்ளார்.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது, யாழ்ப்பாண மாவட்டம் அர

→ 8ஆம் பக்கம் பார்க்க

## ரெலோ உறுப்பினர்களுக்கு பிணையில்செல்லஅனுமதி

(வவுனியா)

வவுனியா செட்டி குளம் பகுதியில் உள்ள முதலியா குளம் ரெலோ முகாம் சுற்றி வளைக்கப்பட்டு கைது செய்யப்பட்ட 11பேர் வவுனியா மாவட்ட நீதிவான் எம். இளஞ்செழியனால் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

பிணையில் விடுவிக்கப்பட்ட 11பேரும் தலா ஐயாயிரம் ரூபா சரீரப்பிணையிலேயே விடுவிக்கப்பட்டுள்ளனர். இவர்கள மீண்டும்

→ 8ஆம் பக்கம் பார்க்க

## மூதூரில் ஷெல்வீச்சு மாணவர் இருவர்பலி

(மூதூர்)

மூதூர் புதிய உட்துறைமுக வீதிப்பகுதியில் நேற்று இடம்பெற்ற ஷெல் தாக்குதலில் இரு பாடசாலை மாணவர்கள் ஸ்தலத்தில் கொல்லப்பட்டனர். பத்துப்பேர் படுகாயமடைந்தனர்.

நேற்றுக்காலை 7.30மணிக்கு வீழ்ந்து வெடித்த ஷெல்லினாலேயே இவ்வனர்த்தம் நிகழ்ந்தது.

இச்சம்பவத்தில் படுகாயமடைந்த பத்துப்பேரில் எட்டுப்பேர் மிகக் கடுமையான

→ 8ஆம் பக்கம் பார்க்க

## நிலாவெளியில் கடற்படையினர்சூடு

# நான்கு அப்பாவி மீனவர்கள் பலி!

## எதிர்ப்பு தெரிவித்து மக்கள்மறியல்போர்

(திருகோணமலை)

நிலாவெளி, கோபாலபுரம் பகுதியில் நேற்று முன்தினம் மாலை 6.35 மணியளவில் கடலில் மீன்பிடிக்கச் சென்று வீடுதிரும்பிக் கொண்டிருந்த மீனவர்கள் நால்வர் கடற்படையினரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி மரணமடைந்துள்ளனர்.

கோபாலபுரத்தைச் சேர்ந்தவர்களான ஜீவானந்தன் பிரசாந்தன் (வயது-18) ஜேம்ஸ் பிரதாபரன் (வயது

→ 8ஆம் பக்கம் பார்க்க

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## சிறு விளம்பரம்

### மலிவு விலை

பாடசாலைப் புத்தகங்கள், உபகரணங்கள், அப்பியாசக் கொப்பிகள், இலங்கை, இந்திய எழுத்தாளர்களின் நாவல்கள், சஞ்சிகைகள், பத்திரிகைகள் அனைத்தும் மலிவாக எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம். இன்றே விஜயம் செய்யுங்கள். ஸ்ரீ சக்தி புத்தகசாலை சிவகாம சுந்தரி அம்மன் ஆலயத்துக்கு அருகாமை ஆடிய பாதம் வீதி திருநெல்வேலி. (கி-1056)

# பயண அனுமதி வழங்கப்பட்டோர் விபரம்

நவம்பர் மாதம் 22 ஆம் திகதி வெளியிடப்பட்ட பட்டியலின் படி யாழ். குடாநாட்டிலிருந்து வெளியிடங்களுக்குப் பயணம் செய்ய அனுமதி வழங்கப்பட்டவர்களின் பதிவு இலக்கங்கள் பிரதேசங் செயலர் பிரிவு ரீதியாகத் தரப்படுகின்றன.

**சங்கானை**

169106 ஏ 169984 ஏ

**கரவெட்டி**

171529 ஏ

**கோப்பாய்**

149018 ஏ 149018 பி
149018 சி 149018 டி
154492 ஏ 154492 பி
154492 சி 154492 டி
154492 ஈ 154492 எப்
167537 ஏ 167543 ஏ
167610 ஏ 167610 பி
167622 ஏ 167622 பி
167622 சி 167622 டி
167622 ஈ 167631 ஏ
167649 ஏ 167668 ஏ
167668 பி 167669 ஏ
167669 பி 167686 ஏ
167721 ஏ 167737 ஏ
168220 ஏ 169220 பி
168261 ஏ 168267 ஏ
168267 பி 168267 சி
171517 ஏ

**நல்லூர்**

147647 ஏ 167554 ஏ
167580 ஏ 167580 பி
167580 சி 167583 ஏ
167583 பி 167598 ஏ
167612 ஏ 167612 பி
167612 சி 167612 டி
167629 ஏ 167644 ஏ
167644 பி 167644 சி
167670 ஏ 171501 ஏ
171511 ஏ 171512 ஏ
171513 ஏ 171527 ஏ
179989 ஏ 170133 ஏ
110133 பி

**சண்டிலிப்பாய்**

171528 ஏ 165698 ஏ
165698 பி 166464 ஏ
166512 ஏ 169243 ஏ
169243 பி 169243 சி
169256 ஏ 169256 பி
169361 ஏ 169550 ஏ
169550 பி

**உடுவில்**

157288 ஏ 157288 பி
167514 ஏ 167567 ஏ
167637 ஏ 167637 பி
167637 சி 167655 ஏ
167655 பி 167661 ஏ
167661 பி 167671 ஏ
167672 ஏ 167679 ஏ
168361 ஏ 168361 பி
171502 ஏ 170039 ஏ
170039 பி 170039 சி

நவம்பர் மாதம் 23-ஆம் திகதி வெளியிடப்பட்ட பட்டியலின் யாழ். குடாநாட்டிலிருந்து வெளி மாவட்டங்களுக்குப் பயணம் செய்ய அனுமதி வழங்கப்பட்டுள்ளவர்களின் இலக்கங்கள் பிரதேச செயலர் பிரிவு ரீதியாகத் தரப்படுகின்றன.

**சங்கானை**

161904 ஏ 161905 ஏ
165737 ஏ 165737 பி
166557 ஏ 166558 பி
166558 சி 168941 ஏ
169077 ஏ 169077 பி
169267 ஏ 169301 ஏ
169201 பி 169309 ஏ
169309 பி 169309 சி
170193 ஏ

**நல்லூர்**

161662 ஏ 161662 பி
161662 சி 164030 ஏ
164030 பி 166653 ஏ
166766 ஏ 169280 ஏ
169280 பி 169280 சி
169305 ஏ 169305 பி

**சண்டிலிப்பாய்**

154120 ஏ 169264 ஏ
170190 ஏ

**தெல்லிப்பழை**

160793 ஏ 168953 ஏ
168953 பி

**உடுவில்**

150278 ஏ 166558 ஏ
170013 ஏ 170146 ஏ
170146 பி 170241 ஏ

# மாணவிகளின் பின்னால் அலைவோரை கைதுசெய்க

(வவுனியா)

பாடசாலை மாணவிகளை தொல்லைப்படுத்தி அவர்களுக்குபின்னால் தேவையின்றி அலைபவர்களைக் கைது செய்யுமாறு போக்குவரத்துப் பொலிஸாரை வவுனியா மாவட்ட நீதிபதி எம். இளஞ்செழியன் பணித்துள்ளார்.

வவுனியா நகரில் பாடசாலை மாணவிகளை தொல்லைப்படுத்தும் மோட்டார் சைக்கிளில் செல்லும் பிரகிருதிகளின் சேட்டைகள் அதிகரித்துள்ளதாக மாணவிகளின் பெற்றோரால்மாவட்ட நீதிபதிக்கு முறைப்பாடு செய்யப்பட்டது. இதனையடுத்தே மேற்படி உத்தரவை நீதிபதி பிறப்பித்ததாகத்தெரிவிக்கப்படுகிறது. (ந-2)

## சோமவார உற்சவம்

[நல்லூர்]

கோண்டாவில் மேற்கு புகையிரத நிலையப் பகுதி ஸ்ரீ அதிபதீஸ்வரர் ஆலயத்தில், கார்த்திகைமாதத் திங்கள், 'சோமவார உற்சவம்' சிறப்பாக நடைபெற்று வருகின்றது. [உ-03]

ஊர்காவற்றுறை

உதவி அரசாங்க அதிபர் பணிமனை

# பிரசித்த ஏல விற்பனை அறிவித்தல்

ஊர்காவற்றுறை பொலிஸாரினால்கைப்பற்றப்பட்டு வழக்கு இல. 131 ன் படி ஊர்காவற்றுறை நீதிமன்றத்தினால் பறிமுதல் செய்யப்பட்டு ஊர்காவற்றுறை பொலிஸ் நிலைய வளவில் வைக்கப்பட்டுள்ள கீழே குறிப்பிட்ட பொருட்கள் நீதிமன்றக் கட்டளையின்படி 2000.12.12 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையத்தில் வைத்து என்னால் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

அலுமினியம் - 1314 கிலோ கிராம்
செப்பு - 25 கிலோ கிராம்
பித்தளை - 1234 கிலோ கிராம்

மேற்படி பொருட்கள் சேதமடைந்த நிலையிலுள்ள பாத்திரங்கள் முதலியனவாகும். பொலிஸ் நிலைய வளாகத்தில் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ள இவற்றை பொறுப்பதிகாரியின் அனுமதியுடன் பார்வையிடலாம்.

சித்திகர விலை கோருபவர் உடனே முழுத் தொகையையும் பணமாக செலுத்தி உடைமையாக்கியவுடன் அன்றைய தினமே பொருட்களை அகற்றுதல் வேண்டும்.

ஜே. எக்ஸ். செல்வநாயகம்
உதவி அரசாங்க அதிபர்,
தீவகம் வடக்கு,
ஊர்காவற்றுறை. (கி-1055)

# நல்லூர் பிரதேச சபை நல்லூர்கொக்குவில்உப-அலுவலகங்கள்

**01. ஆதனவரி அறிவித்தல் - 2001**

1987ம் ஆண்டின் பிரதேசசபைகள் கட்டளைச்சட்டம் இல: 15 இன் கீழ் அதற்கு உரித்தாக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் சார்பாக ஆதனவரி அறவீடு நல்லூர் உப அலுவலக எல்லைக்குட்பட்ட ஆதனங்களுக்கு சென்ற வருடம் அறவிடப்பட்ட வரி விகிதத்தின் பிரகாரம் 2001ம் ஆண்டும் அறவீடு செய்யப்பட வேண்டும் எனவும் கொக்குவில் உப-அலுவலக எல்லைக்குட்பட்ட ஆதனங்களுக்கு மீளாய்வு செய்யப்பட்ட வரி விகிதத்தின் பிரகாரம் 2001ம் ஆண்டு அறவீடு செய்யப்பட வேண்டும் எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

2001ம் ஆண்டுக்கான ஆதன வரியை 31/01/2001 ஆம் திகதிக்கு முன்பாக முழுமையாக செலுத்துவோருக்கு அவ்வருட மொத்த வரியில் 10% கழிவு வழங்கப்படும். ஒவ்வொரு காலாண்டுக்கும் உரிய வரியை அந்த கந்தாயத்தின் முதல் மாத முடிவுக்குள் செலுத்துவோருக்கு காலாண்டுக்கான வரியின் 5% கழிவு வழங்கப்படும்.

குறிப்பிட்ட திகதிக்குள் ஆதன வரியைச் செலுத்தத் தவறின் வசிப்பிடங்களுக்கும் வெற்றுக் காணிகளுக்கும் 15% மும் ஏனைய ஆதனங்களுக்கு 20% மும் விறாந்துக் கட்டணமாக வரியுடன் சேர்த்துச் செலுத்தப்பட வேண்டும்.

எனவே தங்கள் ஆதனங்களுக்குரிய வரிகளை 31/01/2001ஆம் திகதி நண்பகல் 12-00 மணிக்கு முன்பாக அந்தந்த அலுவலகங்களில் முழுமையாக செலுத்தி வரிக்கழிவுகளைப் பெற்று சபையுடன் ஒத்துழைக்குமாறு வரியிறுப்பாளர்கள் அனைவரையும் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பு:-

01 2000ம் ஆண்டு முடியவுள்ள வரி நிலுவைகள் செலுத்தப்பட்ட பின்பே 2001ம் ஆண்டிற்கான வரி ஏற்றுக்கொள்ளப்படும்.

02 சேதமடைந்தும், காலியாகவுள்ளதுமான ஆதனங்களுக்கான வரிவிலக்கின் பொருட்டான விண்ணப்பங்கள் 31/01/2001 இற்கு முன் கிடைக்கக்கூடியதாக இவ்வலுவலகத்தில் சமர்ப்பிக்க வேண்டும்.

03 தற்போதைய கால சூழ்நிலை காரணமாக வருடாந்த வரி பற்றிய அறிவுறுத்தல் பத்திரங்கள் தாமதமானாலும் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொண்டுதங்கள் வரிகளை உரியகாலத்தில் அலுவலகத்தில் செலுத்தி நிர்வாகத்துடன் ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

**02. வீடமைப்பு நகர சீர்திருத்த கட்டளைச்சட்டம் பிரிவு 26இன் பிரகாரமான அறிவித்தல்**

நல்லூர் பிரதேச சபையின் அனுமதியின்றி சபை எல்லைக்குள் கட்டடங்கள், மதில், மலகூடங்கள் என்பன கட்டுதல், புதுப்பித்தல் வேலைகள் செய்தல் சட்டத்தின்படி தண்டனைக்குரிய குற்றமாகும் ஆகவே கட்டடங்கள், மதில், மலகூடங்கள் என்பன கட்டுவதற்கும் பழையனவற்றை புதுப்பிப்பதற்கும் பிரதேச சபையில் இருந்து பெறப்படும் முறையான விண்ணப்பப்படிவத்தின் மூலம் விண்ணப்பம் செய்து நல்லூர் பிரதேச சபையின் முன் அங்கீகாரம் பெறுதல் வேண்டும் என்பதை இத்தால் அறியத் தருகின்றேன். முன் அங்கீகாரம் பெறாது கட்டப்படும் கட்டடங்கள் யாவும் எதுவித நஷ்டஈடும் வழங்கப்படாது சபையினால் அகற்றப்படுமென அறியத்தருகின்றேன்.

**03. 2001ஆம் ஆண்டிற்கான வியாபார உரிமம்**

நல்லூர் பிரதேச சபைக்குட்பட்ட சகல வர்த்தக நிலையங்களும் தங்கள் வியாபார நிலையங்களுக்காக விண்ணப்பப்பத்திரத்தை நல்லூர் பிரதேச சபையின் உப அலுவலகங்களில் பெற்று 31/12/2000 ஆம் திகதிக்கு முன்னர் பூர்த்தி செய்து காரியாலயங்களில் ஒப்படைக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன். மேலும் 2001ஆம் ஆண்டு பங்குனி 31ஆம் திகதிக்கு முன்னர் உரிமக்கட்டணத்தை செலுத்தி வியாபார உத்தரவுப்பத்திரத்தை பெற்றுக் கொள்ளும்படியும் கேட்டுக்கொள்கின்றேன். 31/03/2001 ஆம் திகதிக்கு பின்னர் வியாபார அனுமதிப்பத்திரமின்றி எவ்வித வர்த்தக நிலையங்களும் அனுமதிக்கப்படமாட்டாது என அறியத்தருகின்றேன்.

க. மணிபல்லவராஜன்
(ஜே.பி.யூ.எம்)
தலைவர்
நல்லூர் பிரதேச சபை

நல்லூர் பிரதேச சபை
திருநெல்வேலி

(கி-1058)

## பிரிவுத் துயர் பகிர்வு

### கனகசபை சண்முகரட்ணம்

உடுவில் கிழக்கு, பெரியமதவடியைச் சேர்ந்த கனகசபை சண்முகரட்ணம் 22.11.2000 அன்று காலமானார்.

இறுதிக்கிரியைகள் நேற்று நடைபெற்றன.

தகவல்: சங்கர் மாஸ்ரர் (பெறாமகன்)

### சிவசம்பு மாணிக்கம்

சித்தன்கேணியைச் சேர்ந்த சிவசம்பு மாணிக்கம் 22 ஆம் திகதி வியாழக்கிழமை சிவபதமெய்தினார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று நடைபெற்றன.

தகவல்: செல்வராசா (மகன்)

### திருமதி நாகரத்தினம் யோகம்மா

உடுப்பிட்டி இலக்கணவத்தையைப் பிறப்பிடமாகக் கொண்ட நாகரத்தினம் யோகம்மா 22 ஆம் திகதி காலமானார்.

தகனக்கிரியைகள் நேற்று நடைபெற்றன.

தகவல்: என். துரைரட்ணம் (மகன்)

### வல்லிபுரம் வடிவேலு

அளவெட்டி தெற்கைப் பிறப்பிடமாகவும் இந்தியாவை வசிப்பிடமாகவும் கொண்ட வல்லிபுரம் வடிவேலு 21 ஆம் திகதி இந்தியாவில் காலமானார்.

அன்னாரின் ஈமைக்கிரியைகள் நாளை சனிக்கிழமை திருச்சியில் நடைபெறும்.

தகவல்: நா. தனபாலசிங்கம்

### கந்தையா செல்வரத்தினம்

யாழ்ப்பாணம், கச்சேரியடியைப் பிறப்பிடமாகவும் மட்டக்களப்பு காரைதீவை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா செல்வரத்தினம் 21 ஆம் திகதி காலமானார்.

தகனக்கிரியைகள் 23 ஆம் திகதி வியாழக்கிழமை நடைபெற்றன.

தகவல்: சகோதரி

## ஆடுகளம் அமைப்பு

ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி மைதானத்தில் கூடைப்பந்தாட்ட ஆடுகளம் ஒன்றினை அமைப்பதற்கான முயற்சியில் கல்லூரி அதிபர் வணக்கத்திற்குரியபிதா ஜேசுதாசன் ஈடுபட்டுள்ளார்.

இருபது வருடங்களுக்கு முன் இக் கல்லூரியில் ஆடுகளம் ஒன்று இருந்ததாகவும் முறையாகப் பராமரிக்கப்படாமையினாலேயே சீரழிந்து போய்விட்டதாக அதிபர் தெரிவித்தார்.

அதிபரின் இம்முயற்சிக்கு கல்லூரியின் பழையமாணவர் சங்கம் உதவமுன்வந்துள்ளது. [ச-110]

## செய்தித் துளிகள்

### நிவாரணம் வழங்கல்

சுன்னாகம், இணுவில், உடுவில், உரும்பிராய்ப் பகுதிகளிலுள்ள இடம்பெயர்ந்த மற்றும் நிரந்தர வதிவிட மக்களுக்குஉலர்உணவுப்பொருட்கள வழங்கப்பட்டு வருகின்றன.

இப்பொருட்களை இம்மாத முடிவுக்குள் பெற்றுக்கொள்ளுமாறு கூட்டுறவுச் சங்கங்கள் அறிவித்துள்ளன. (ச – 14)

### கஞ்சாவுடன் கைது

(கொழும்பு)

ரியூசன் வகுப்பு நடத்துவதாக பாசாங்கு காட்டி போதைப் பொருள் விற்பனையில் ஈடுபட்ட கொழும்பு ரொன்பாஸைச் சேர்ந்த நபரொருவர் இருபது கிலோ கிராம் கஞ்சாவுடன் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

ரியூசன்வகுப்புநடத்துவதாக வெளிக்காட்டி தந்திரமாக போதைப் பொருள் வியாபாரத்தில் பிரஸ்தாப நபர் ஈடுபடுவதாகக் கிடைத்த தகவலையடுத்தே அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

(இ

### வீதி சீரின்மை

(மல்லாகம்)

உடுவில் மத்தி, கீழிச்சந்தை வீதி நீண்டகாலமாகத் திருத்தப்படாமல் குன்றும் குழியுமாகக் காணப்படுவதனால் மக்கள் போக்குவரத்துக்குப் பெரும் இடையூறாக உள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது பெய்யும் மழை காரணமாக சந்தைக்குச் சென்று வருவோர் மிகுந்த அசௌகரியங்களை எதிர்நோக்குகின்றனர்

எனவே சம்பந்தப்பட்டவர்கள் அவ் வீதியைச் செப்பனிட்டு உதவுமாறு அப்பகுதி மக்கள் கேட்டுள்ளனர்.

(ச-14)

### சமுர்த்தி செயலணிக்கூட்டம்

[ஊர்காவற்றுறை]

ஊர்காவற்றுறை பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட நாரந்தனை வடக்கு ஜே-55 கிராம சேவையாளர் பிரிவில் சமுர்த்தி செயலணிக்கூட்டம் இன்று காலை 10.00மணிக்கு நாரந்தனை வடக்குசனசமூக நிலைய மண்டபத்தில் வலயம் 2- இன் முகாமையாளர் அ. அறிவரசி தலைமையில் நடைபெறவுள்ளது. (செ- 75)

### காரைநகர் மக்கள் கோரிக்கை

(வண்ணார்பண்ணை)

காரைநகருக்கு சென்றுவருவோர் அனுபவித்துவரும் பல்வேறு இடையூறுகளை நீக்குவதற்கு ஏற்ற ஒழுங்குகளை மேற்கொ...ருமாறு ஐக்கிய தேசிய கட்சியின் யாழ். மாவட்ட நாடாளு மன்ற உறுப்பினர் தியாகராசா மகேஸ்வரனிடம் சம்பந்தப்பட்ட மக்கள் .கோரிக்கை விடுத்துள்ளனர்.

(உ-109)

### மறைந்த சோதிடருக்கு கௌரவம்

(யாழ்ப்பாணம்)

அண்மையில் மரணமான தொல்புரம் பிரபல சோதிடர் வ. அமுதலிங்கத்திற்கு சோதிட கலாமணி என்னும் பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டது.

தொல்புரம் கிராம அபிவிருத்தி சங்கத்தினர் தொல்புரம் மத்திய சனசமூக நிலையத்தினர் ஆகியோர் பட்டம் வழங்கி கௌரவித்ததுடன் மலரும் வெளியிட்டு வைக்கப்பட்டது. (க)

### வீடியோப் படக்காட்சி

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக புறநிலைப்படிப்புகள் அலகும், திரைப்பட வட்டமும் இணைந்துவழங்கும் மகாத்மாகாந்தி பற்றிய திரைப்படக் காட்சியின் மூன்றாவது தொடரில் நாளை சனிக்கிழமை ஷியாம் பெனக்ஸ் எனும் ''உருவாக்கப்படும் மகாத்மா'' ஆங்கிலத் திரைப்படம் வீடியோக் காட்சியாக மு. ப 10. 00 மணிக்கு புவியியற்றுறை மண்டபத்தில் காண்பிக்கப்படவுள்ளது.

இந்நிகழ்வுக்கு ஆர்வமுள்ளோர் எவரும் வருகைதர முடியுமென்றும், இக்காட்சித் தொடர் கல்லூரிகளில் பயிலும் உயர்தரவகுப்பு மாணவர்களுக்கும் பல்கலைக்கழக மாணவர்களுக்கும் பயன்மிக்கதாக அமையுமென்றும் இணைப்பாளர் பேராசிரியர் இரா. சிவச்சந்திரன் தெரிவித்துள்ளார். (செ)

### விளையாட்டு போட்டி

(சுண்டுக்குளி)

நெடுந்தீவு சென் அன்ரனீஸ் பாலர் பாடசாலையும், குழந்தை இயேசு முன்பள்ளியும் இணைந்து நடத்திய விளையாட்டுப் போட்டி கடந்த ஞாயிற்றுக்கிழமை குழந்தை இயேசு முன்பள்ளி விளையாட்டு மைதானத்தில் அன்ரன் ஜெயக்குமார் தலைமையில் நடைபெற்றது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ரி வி. கிருஷ்ணசாமி கலந்து கொண்டு வெற்றி பெற்றோருக்கான பரிசில்களையும் வழங்கினார்.

(உ-110)

### யாழ் பல்கலை வணிகமாணி பரீட்சை

(வண்ணார்பண்ணை)

யாழ். பல்கலைக்கழக வெளிவாரி வணிகமாணி பகுதி1 இற்கான பரீட்சை எதிர்வரும் டிசம்பர் மாதம் 1ஆம் திகதிஆரம்பமாகி 11ஆம் திகதிவரை நடைபெறவுள்ளது.

இப்பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் வெளிவாரி பரீட்சை அலகில் வழங்கப்படுகின்றதோடு நேர அட்டவணையையும் அங்கு பார்வையிடலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச–109)

### கருத்தரங்கு

(அரியாலை)

விழிப்புலன் வலுவிழந்த மாணவர்களுக்கு, கற்பித்தல் தொடர்பான கருத்தரங்கின் தொடர்ச்சி, எதிர்வரும் 26 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை யா/ இராமநாதன் கல்லூரியில் நடை பெறவுள்ளது.

''விழிப்புலன் வலுவிழந்த மாணவர்களின் ஆளுமை விருத்தியில் பாடசாலைகள் கவனிக்க வேண்டிய விடயங்கள்'' எனும் பொருளில் வலிகாமம் கல்விவலய உதவிக்கல்விப் பணிப்பாளர் திருமதி கோகிலா மகேந்திரன் விரிவுரையாற்றுவார்.

(உ-106)

### உயர்கல்வி பிரதியமைச்சர்

(கொழும்பு)

உயர் கல்வி மற்றும் தகவல் தொழில் நுட்ப அபிவிருத்தி பிரதி அமைச்சராக முன்னாள் கல்வி அமைச்சர் றிச்சட் பத்திரன்ன ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

இதே வேளை பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சராகவும் அவர் ஏற்கனவே கடமை புரிந்து வருவதுதெரிந்ததே. (ந-5)

# அமைச்சர் டக்ளஸிடம் ரெலோ எம். பி வேண்டுகோள்

(வவுனியா)

வடபகுதியில் இடம்பெறும் யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்து வவுனியா நலன்புரி நிலயங்களில் வாழும் மக்களை மீளக்குடியமர்த்துவதற்கு அனைத்து வசதிகளுடனும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டுமென வன்னிமாவட்ட பாராளு மன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் வடமாகாண புனர்வாழ்வு புனரமைப்பு வடக்கு - கிழக்கு தமிழ்மொழி அமுலாக்கல் இந்து கலாசார அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அவ் வேண்டுகோளில் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்திருப்பதாவது; நலன்புரி நிலைய வாழ்க்கை நிறுத்தப்பட்டு வவுனியாவில் அவர்களுக்கு காணிவழங்கி அங்கு அவர்களை குடியமர்த்துவதே சிறந்த திட்டமாகுமென்று ஆலோசனை தெரிவித்துள்ளார்.

வவுனியா நலன்புரி நிலையத்தில் 23 ஆயிரம்பேர் வசித்துவருகின்றனர் என்பதனையும் சுட்டிக்காட்டியுள்ளார்.

(வி)

## படித்தவுடன்வேலைவாய்ப்பு இன்று முதல்பயிற்சிகள் வலய ரீதியாகஇடம்பெறும்

[சுண்டுக்குளி]

தேசிய இளைஞர் சேவை மன்றம் வலயக் கல்வித் திணைக்களத்துடன் இணைந்து பாடசாலைகளில் தரம்13இல்கல்விகற்கும்மாணவர்களுக்கு, பாடசாலையை விட்டு விலகியதும் தொழில் வாய்ப்பைப் பெறுவதற்கு உதவியாக பயிற்சிப் பாசறைகளை நடத்த உள்ளது.

வலய ரீதியாக இன்று 24 ஆம் திகதி தொடக்கம் எதிர்வரும் டிசம்பர் 1–ஆம் திகதி வரை தெரிவு செய்யப்பட்ட சில பாடசாலைகளில் இப் பயிற்சிப் பாசறை நடத்தத் திட்டமிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இப்பயிற்சி நெறிகள் இன்று தென்மராட்சி கல்வி வலயத்திலும் 28ஆம் திகதி தீவகக் கல்வி வலயத்திலும் டிசம்பர் மாதம் 01-ஆம் திகதி வடமராட்சிக் கல்வி வலயத்திலும் நடத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளன.

இப் பாசறை நிகழ்வில் வலயக் கல்விப் பணிப்பாளர்களும் தேசிய இளைஞர் சேவை மன்ற உதவி இயக்குநர் ரி சிவதட்சணாமூர்த்தியும் கலந்து கொண்டு விரிவுரைகளை ஆற்றவுள்ளனர் எனத்தெரிவிக்கப்பட்டுள்ளது.

[ச-110]

## தலைமன்னார் கடற்படை பொறுப்பதிகாரியை மன்றில்ஆஜராக உத்தரவு

(கொழும்பு)

தலை மன்னார் கடற்படைப் பொறுப்பதிகாரி எம்.எஸ். சில்வாவை எதிர்வரும் ஜனவரி மாதம் 8ஆம் திகதிக்குமுன் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யுமாறு மன்னார் மாவட்ட நீதிபதி பணித்துள்ளார்.

இது தொடர்பான உத்தரவு இலங்கை கடற்படைத் தளபதிக்கு அனுப்பி வைக்கப் பட்டுள்ளது.

இலங்கையில் இருந்து இந்தியா சென்றவேளை நடுக்கடலில் உள்ள மண்திட்டியில் இறக்கிவிடப்பட்ட பொது மக்கள் தொடர்பான விசாரணைகளை நடத்திவரும் மன்னார் மாவட்ட நீதிபதி சம்பந்தப்பட்ட வள்ளம் மற்றும் அதன் இயந்திரம் என்பவற்றை தலைமன்னார் கடற்படையினர் பொலிஸார் வசம் ஒப்படைக்கத் தவறியதையடுத்தே இவ் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. (உ)

## யா. மாவட்ட கூடைப்பந்து இறுதிப்போட்டி முடிவுகள்

(சுண்டுக்குளி)

யாழ். மாவட்டகூடைப்பந்தாட்ட சங்கம், ஹற்றன் நஷனல் வங்கியின் அனுசரணையுடன் யாழ்.மாவட்ட ரீதியில் நடத்திய கூடைப்பந்தாட்ட போட்டியின் இறுதி ஆட்டங்களும் பரிசளிப்பு வைபவமும் கடந்த 18 ஆம் திகதி யாழ்.இந்துக்கல்லூரி விளையாட்டு மைதானத்தில் ஹற்றன் நஷனல் வங்கியின் பிரதிநிதி பஞ்சலிங்கம் சங்கரின் நெறிப்படுத்தலில் நடைபெற்றது.

பாடசாலைகளுக்கிடையிலான போட்டியின் இறுதி ஆட்டத்தில் யாழ். இந்துக் கல்லூரி அணி வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணியை தோற்கடித்து சம்பியன் கிண்ணத்தை தனதாக்கிக் கொண்டது.

கழக அணிகளுக்கிடையிலான பெண்கள் பிரிவுஇறுதி ஆட்டத்தில் ஜொலிஸ்ரார் அணி குருநகர் யுத்காமல் அணியை பலத்த போட்டியின் பின் வென்று வெற்றிக் கிண்ணத்தை தனதாக்கிக் கொண்டது.

இறுதியாக இடம்பெற்ற ஆண்கள் பிரிவு ஆட்டத்தில் யாழ்.பழ்கலைக்கழக அணி அதனை எதிர்த்து ஆடிய சென்றலைட்ஸ் அணியை வெகு இ.குவாக தோற்கடித்து சம்பியன் ஆனது.

இவ்ஆட்டங்களுக்கு தீர்ப்பாளர்களாக ஏ.எப்.டி.அல்பிறட், கென்றிசண்தாயாளன் வசந்தகுமார் ஆகியோர் சுழற்ச்சி முறையில் கடமையாற்றினார்கள்.

(உ-110)

## வவுனியாவில் கடத்தப்பட்ட வர்த்தகர் கொழும்பில் விடுவிப்பு

(வவுனியா)

வவுனியாவில் கடந்தவெள்ளியன்று இரவு கடத்திச் செல்லப்பட்ட பிரபல இரும்புக்கடை வர்த்தகர் ஒருவர் கொழும்பில் விடுவிக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

கடத்திச் செல்லப்பட்ட வர்த்தகர் கந்தசாமி கருணாகரனின் கடத்தலுக்கு எவருமே உரிமை கோராதநிலையில் இப்பொழுது கொழும்பில் வைத்து விடுவிக்கப்பட்டுள்ளார்.

வவுனியா வெளிக் குளத்திலுள்ள இல்லத்திலிருந்து கடத்திச் செல்லப்பட்ட இவர் பாதுகாப்புப்படையினரின் பலத்த சோதனைக்கு மத்தியில் கொழும்புக்கு எவ்வாறு கடத்திச் செல்லப்பட்டார் என்பது குறித்துபாதுகாப்புப் படையினர் பலத்த வியப்பு தெரிவித்துள்ளனர்.

(வ)

## இராசி பலன்

24-11-2000
(கார்த்திகை 09, வெள்ளி)
சதுர்த்தசி பி இ 4.37 வரை
சுவாதி பி,ப 3.57 வரை
ராகுகாலம் 10 42- 12.12
சுபநேரம் 6 12- 7.42
சித்தம்

**மேடம்**
உல்லாசம், விருந்துபசாரம். பிரயாணம், வாகன வசதி, கௌரவம்.

**இடபம்**
சுகவாழ்வு, சத்துருஜெயம், முயற்சி பலிதம், மனப்பயம்.

**மிதுனம்**
சிறுவியாதி, மனக்கவலை, பிரயாண இடையூறு, காரியம் கைகூடும்.

**கடகம்**
கல்வியில் மேன்மை, ரோகம், காரிய தாமதம்' மனக்கிலேசம்.

**சிங்கம்**
முயற்சி கைகூடும், சகோதரா உதவி, பிரயாணம், டுப்பசுசம்.

**கன்னி**
விவாதம், தனவிரயம், காரிய நன்மை, பதட்டப்படல்.

**துலாம்**
உடல் நலம், புதிய சிந்தனை போசன சுகம், சயன சுகம்.

**விருச்சிகம்**
பிரயாண அலைச்சல், வியாதி, சயன சுகக்குறைவு, காரிய தாமதம்.

**தனுசு**
நண்பர்கள் சந்திப்பு, சந்தோசமான நிகழ்வு, தனலாபம், முயற்சி மந்தம்.

**மகரம்**
மற்றவர்கள் கீழ்படிவர், முயற்சி கைகூடல், நன்மையான சம்பவம், பெரியோர் சந்திப்பு.

**கும்பம்**
தந்தைவழி உறவு, பிரயாணம், வயிற்றுக் கோளாறு, மனக்கிலேசம்.

**மீனம்**
நிலைமாற்றம், தேவையற்ற பிரச்சினை, காரியத்தடை, நோய்.

(பழையநேரப்படி கணிப்பிடப்பட்டது.)

வளவன்

## ஒலிப்பேழை வெளியீடு

(நல்லூர்)

யாழ்ப்பாணத்தின் மிருதங்கக் கலைஞர்களுள் ஒருவரான இசைக்கலைமணி எஸ். துரைராசா வட இலங்கை சங்கீத சபையின் பாடத்திட்டத்திற்கு அமைவாக மிருதங்க மாணவர்கள் பயன்பெறத்தக்க வகையில்' தரம்-1தரம் 2-செயன் முறையை மிருதங்கத்தில் வாசித்து ஒலிப்பேழைகளாக வெளியிட்டுள்ளார்.

(உ-103)

# பொது அறிவு வினாக்கள்

## இல: 32 தொகுப்பு:யூட்

**பின்வரும் நாடுகளின் தலை நகரங்கள் எவை?**

1. வியட்நாம் —
2. யூகோஸ்லாவியா —
3. ஜிம்பாவே —
4. சிரியா —
5. தன்சானியா —

**பின்வரும் நாடுகளின் நாணய அலகுகள் எவை?**

6. உகண்டா —
7. துருக்கி —
8. ஸ்பெயின் —
9. நோர்வே —
10. பப்புவாநியூகினியா —
11. இந்தியாவின் புதிய மாநிலமாக அண்மையில் பிரகடனப் படுத்தப்பட்ட பிரதேசம் எது?
12. இலங்கையில் 5 ஆம் ஆண்டு மாணவர்களுக்கான புலமைப் பரிசில் திட்டம் எப்போது அறிமுகப்படுத்தப்பட்டது?
13. மனிதத் தோலின் நிறத்திற்கு காரணமான பதார்த்தம் எது?
14. இந்தியாவில் முதன் முதல் எப்போது சோடா (மென் பானம்) விற்பனைக்கு கொண்டு வரப்பட்டது?
15. எமது கைகளின் எந்த விரலில் நகம் வேகமாக வளருகின்றது?
16. நீரின் அடியில் ஒலியைப் பதிவு செய்யும் கருவி எப் பெயர் கொண்டு அழைக்கப்படுகின்றது?
17. உலகின் சிறந்த திரைப்படங்களுக்காக அமெரிக்காவினால் வழங்கப்படும் உயர் விருது எது?
18. சர்வதேச நீதிமன்றின் தலைமையகம் எங்குள்ளது?
19. இலங்கையில் எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் அமைந்துள்ள பிரதேசம் எது?
20. 14ம் 15ம் ஒலிம்பிக் போட்டிகள் அடுத்தடுத்து ஒரு நகரத்திலேயே இடம் பெற்றன அந்நகர் எது?
21. பிரான்ஸ் நாட்டின் ஈபிள் கோபுரத்தின் உயரம் எத்தனை அடிகள்?
22. ஒலி பெருக்கி எத்தனையாம் ஆண்டு யாரால் கண்டு பிடிக்கப்பட்டது?
23. உலகின் முதல் தொலை பேசியை கண்டு பிடித்தவர் யார்?
24. ஆயிரம் ஏரிகள் கொண்ட நாடு என்று சிறப்பாகஅழைக்கப்படும் நாடு எது?
25. உலகின் மிகப்பெரிய பாலைவனம் எது?அதன் பரப்பளவு எத்தனை சதுர மைல்கள்?
26. பௌத்தர்களின் தெய்வமான புத்தர் எத்தனையாம் ஆண்டு சமாதியடைந்தார்?
27. ஒளி சராசரியாக ஓர் ஆண்டிற்கு எத்தனை கிலோ மீற்றர் பயணம் செய்கின்றது?
28. புளுட்டோ கிரகம் யாரால் கண்டு பிடிக்கப்பட்டது?
29. நில நடுக்கத்தை அளக்கப்பயன்படும் அளவு முறை [அலகு] எது?
30. உலகின் மிகப்பெரிய சமுத்திரமான பசுபிக்கின் பரப்பளவு எத்தனை கிலோ மீற்றர்?
31. தலைகீழான கொடி எத்தகைய நோக்கத்தை வெளிப்படுத்தப்பயன்படுத்தப்படுகிறது?
32. ரஷ்யப் பாராளுமன்றம் எப் பெயர் கொண்டு அழைக்கப்படுகின்றது?
33. டாஸ்ஜிக் எனப்படுவது எந்த நாட்டின் செய்தி நிறுவனம்?
34. C N.N செய்தி நிறுவனத்தின் விரிவாக்கம் யாது?
35. இலங்கையில் உள்ள அரசாங்கப் பாடசாலைகளின் மொத்த எண்ணிக்கை எவ்வளவு?
36. எத்தனையாம் ஆண்டு இலங்கை மக்களிற்கு சர்வ ஜன வாக்குரிமை வழங்கப்பட்டது?
37. இந்திய உளவு அமைப்பான R. A. W [ரோ] என்பதன் விரிவாக்கம் யாது?
38. எத்தனையாம் ஆண்டு ஈராக் தனி நாடாக பிரகடனம் செய்யப்பட்டது?
39. முன்னர் ''போர் மோஸா'' என அழைக்கப்பட்ட நாட்டின் தற்போதைய பெயர் என்ன?
40. இது வரை நடந்த ஒலிம்பிக் போட்டிகளில் அதிகதங்கப் பதக்கங்களைப் பெற்ற பெண் மணி யார்?

**குறிப்பு:-**
இதற்கான விடைகள் 30-11-2000ற்கு முன் எமக்குக் கிடைக்கத்தக்கதாக அனுப்பிவைக்கவும்

## அறிவியல் பகுதி
## வினா இல: 32

"வலம்புரி"
இல: 15, வெள்ளாந்தெரு
யாழ்ப்பாணம்.

மாணவர் முழுப்பெயர்; ..............................
சொந்த முகவரி;: ..............................
கற்கும் பாடசாலை: ..............................
மாணவர் கையொப்பம்; ..............................

இப்படிவத்தை வெட்டி உங்கள் விடைத்தாளுடன் தவறாது இணைத்து அனுப்பிவைக்கவும்

# கல்விப் பொதுத் தராதரப்பத்திர சாதாரணதர மாதிரிப் பரீட்சை - 2000

## தமிழ் மொழியும் இலக்கியமும்

நேரம்:- 1 மணி

ஆக்கம்:- தெல்லிப்பழை யூனியன் கல்லூரி தமிழ் ஆசிரியை

(நேற்றைய தொடர்ச்சி)

**பொருத்தமான விடையினைத் தெரிக.**

21) வல்லின, மெல்லின, இடையின ஓசைகள் இடம்பெற்றமை யாது சொல்?
1) இலங்கை 2) இந்தியா 3) இங்கிலாந்து 4) இளவாலை

22) பின்வருவனவற்றுள் இயல்புப் புணர்ச்சியாய் அமையாதது?
1) தமிழோசை 2) தமிழகம் 3) தமிழ்த்தாய் 4) தமிழருவி

23) பின்வருவனவற்றுள் பெயர்ச்சொற்றொடராய் அமைவது?
1) திரை கடலாடிவரும் தமிழ் நாதம்
2) அன்னைக்கு அன்றாடம் அபிடேகம் அலங்காரம்
3) இன்னிசை பாடிவரும் இளங்காற்று
4) பாடும் வானம்பாடி நான்

24) புத்தம் புதிய பூமி வேண்டும் இதில் புத்தம் புதிய?
1) அடுக்கிடுக்குத்தொடர் 2) அடுக்குத் தொடர்
3) இரட்டைக்கிளவி 4) இணைமொழி

25) அருவிகூட ஜதியில்லாமல் சுரங்கள் பாடும் இவ்வாக்கியத்தில் செயப்படுபொருள்
1) அருவி 2) சுரங்கள் 3) பாடும் 4) கூட

26) மனதில் உறுதி வேண்டும் இதிலிடம் பெற்ற வேற்றுமை?
1) 2ம்வேற்றுமை 2) 7ம் வேற்றுமை
3) 3ம் வேற்றுமை 4) 4ம் வேற்றுமை

27) பின்வருவனவற்றுள் வினைத்தொகையாய் அமையாதது?
1) ஏவுகணை 2) எறிகணை 3) பாம்பணை 4) சுடுகுழல்

28) வீடுகள் தோறும் எரிகின்ற விளக்குகள் இத்தொடரில் இடம் பெற்ற இடைச்சொல்?
1) வீடு 2) தோறும் 3) எரி 4) விளக்கு

29) ''நீலவான ஓடையில் நீந்துகின்ற வெண்ணிலா'' இதிலிடம் பெற்றுள்ள அணி?
1) உருவகம் 2) தன்மைநவிற்சி 3) உவமை 4) தற்குறிப்பேற்றம்

30) பின்வருவனவற்றுள் சிலேடைத்தொடர்
1) சந்திரமதி 2) வதனமதி 3) நூறு தரம் 3) தரம் பத்து

31) புறஞ் சொல்வது நல்ல பண்பு ————
1) அல்ல 2) அல்லவை 3) ஆகா 4) அன்று

32) உரிய நேரத்திற்குச் சென்றிருந்தால் ————
1) அவனைச் சந்திக்கலாம் 2) அவனைச் சந்தித்திருக்கலாம்
3) அவனைச் சந்திக்க முடியாது 4) அவனால் சந்திக்கலாம்

33) ஆங்கில அறிவைப் பெருக்குங்கள் ————
1) ஆதலால் இது கணனியுகம் 2) எனவே இது கணனியுகம்
3) என்றாலும் இது கணனியுகம் 4) ஏனெனில் இது கணனியுகம்

34) கவனமாகப் பரீட்சை எழுதினேன் அதனால் சிறந்த பெறுபேறுகளைப் ————
1) பெறலாம் 2) பெற்றேன் 3) பெறமுடியாது 4) பெறுவாய்

35) கடற்கொந்தளிப்பால் கப்பற் சேவை இன்று ————
1) இடம்பெறும் 2) இடம்பெறா 3) இடம்பெறாது 4) இடம்பெறலாம்

**பாடலைப் படித்து விடையைத் தெரிவு செய்க.**

மஞ்சளாவிய மாடங்கள் தோறும்
மயில்கள் போல் மடவார் கணம் சூழும்
அஞ்சரோருகம் பள்ளியில் வான்சிறை
அன்னவன்னக் குழாம் விளையாடும்
துஞ்சும் மேதி சூறாக்களைச் சீற
சுறாக்கள் ஓடிப் பலாக்கனி கீறி
இஞ்சி வேலியின் மஞ்சளிற் போய் விழும்
ஈழ மண்டல நாடெங்கள் நாடே.

36) பாடலில் ஆசிரியர் கூற வந்த பொருள்
1) நாட்டுவளம் 2) உதயகாலம் 3) கடல்வளம் 4) படைவளம்

37) உயர்வு நவிற்சியாகக் கூறப்பட்ட தொடர்
1) அன்னவன்னக் குழாம் 2) மஞ்சளாவிய மாடங்கள்
3) மயில்கள் போல் மடவார் 4) ஈழமண்டலநாடு

38) கூட்டத்தைக் குறிக்கும் சொற்கள்
1) மாடங்கள், மடவார் 2) இஞ்சி, மஞ்சள்
3) கணம், குழாம் 4) மயில், அன்னம்

39) மயில்கள் போல் மடவார் இதில் உவமேயம்
1) மயில் 2) மயில்கள் 3) போல 4) மடவார்

40) இப்பாடலின் மூலம் வெளிப்படுத்தப்படும் சுவை
1) வெகுளிச்சுவை 2) நகைச்சுவை
3) அவலச்சுவை 4) உவகைச்சுவை

## பொது அறிவு வினா இல. 31 இற்கான விடைகள்

1) அம்மான்
2) ஹன்
3) பனாமா நகரம்
4) வார்சா
5) தனநாரிவ்
6) க்யூட்சால்
7) பேசோ
8) ஜரிஸ்பவுண்ட்
9) சேகில்
10) ரூபாய்
11) இந்தியா
12) போட்டோ குரோமிக்
13) போலிவின்டே பைரோயசின்
14) 2710 Km
15) அலக்ஸ்சாண்டர் பிளமிங்
16) கிரீஸ்-எதென்ஸ், 1896ல்
17) லோக்சபா
18) நைட்றஸ் ஒக்சைட்
19) கிளமெண்ட் ஆன் பெல்லிரிஸ்
20) கந்தபளை
21) 51
22) கருடா
23) அம்பாந்தோட்டை
24) கோனோகிராப்
25) நியூயோர்க்
26) 4, 40,09 ,000 ச.கி.மீ.
27) ருஸ்ஸாமே-யே-ஜான்
28) கியுபா
29) பிரிட்டன்
30) பம்பாய்
31) நியாசாலாந்து
32) செப்ரம்பர் 7
33) எர்ஷாத்
34) HB
35) பொலிவியா
36) தேனெப்
37) பர்மா
38) நவம்பர்-14
39) Associated Press of Pakistan
40) ஜே. ராபர்ட் ஒப்பன் பெய்மர்.

## பொது அறிவு வினா இல- 31

**அதிகூடிய புள்ளிகளைப் பெற்றவர்களின் பெயர் விபரம்**

★ பா. இந்திராதேவி, யாழ்ப்பாணம்.
★ செ. ஜெரீம் நிரோஷன், வட்டுக்கோட்டை.
★ த. கயல்விழி, காரைநகர்
★ ச. ஹபிலன், வட்டுக்கோட்டை.
★ து.கிரிஜா, சித்தன்கேணி.
★ சி. சயந்தன், வட்டுக்கோட்டை.
★ உ.அனித்தா, உரும்பிராய்
★ த. வைஷ்ணவி, தாவடி.
★ சி.தாட்சாயணி, நல்லூர்
★ ஜெ.சங்கிதா, கோண்டாவில்.
★ சி. காயத்திரி, நல்லூர்.
★ து.உமா, சண்டிலிப்பாய்.
★ ச. துஷ்யந்தினி, கல்வியங்காடு
★ ந. ரமணன், ஊர்காவற்றுறை.

## இன்று ஒரு தகவல்

# கடவுளின் கணிதமே வேறுதான்

பதினொருபேர் வழக்கமாகக் கோயிலுக்குப் போய் வருவார்கள். சமயத் தலைவர், ஏழைத்துறவி ஒருவர் இன்னும் ஒன்பதுபேர். ஒரு நாள் அந்தப் பதினொரு பேரும் ஒரு மண்டபத்தில் பஜனையில் ஈடுபட்டிருந்தனர். திடீரென வானம் இருள் கவிழ்ந்து மேகங்கள் மூடின. பெரும்புயல் வீசிற்று மின்னல்கள் வானைக்கீறின. கூரைகள் பறந்தன, மரங்கள் வேருடன் சாய்ந்தன.

உலகம் முழுகப் போகிறது. பிரளயம் வந்தே விட்டது என்றார் ஊர்ப்பணக்காரர். ''ராம ராம! உன் சித்தப்படியே எல்லாம் நடக்கும்'' என்றார் ஏழைத்துறவி. சமயத் தலைவர் கூறினார் கம்பீரக் குரலில், ''எல்லோரும் கேளுங்கள் நம்மில் ஒருவர் பெரும்பாவி அவர் காரணமாக இந்த இடி நம் அனைவர் தலை மீதும் விழப்போகிறது'' பயமுறுத்தும் குரலில் சமயத்தலைவர் கூறினார். நாம் எல்லோரும் ஒரேயடியாக இடியில் மடிய வேண்டுமா என்ன? நான் கூறுவதைக் கேளுங்கள் நாம் ஒவ்வொருவராக ஓடி அதோ அந்த வேப்பமரத்தைத் தொட்டுவர வேண்டும். நம்மில் யார் பாவியோ அவர் வேப்பமரத்தருகே செல்லும் போது இடிவிழுந்து அவர் சாவார். மற்றவர்கள் பிழைத்துக் கொள்வார்கள்.

எல்லோரும் சம்மதித்தனர். சமயத் தலைவரிலிருந்து ஒவ்வொருவராக மழையில் ஓடிச் சென்று வேப்பமரத்தைத் தொட்டுத் திரும்ப ஓடி வந்தனர். ஏழைத்துறவி ராமநாமத்தைச் சொல்லிக் கொண்டே வேப்பமரத்தடிக்கு ஓடினார். அவர் வேப்பமரத்தடியில் நின்று கொண்டிருக்கையில் இடியானது மீதமுள்ள பத்துப்பேர் நின்றிருந்த மண்டபத்தைத் தாக்கி அவர்களை கொன்று போட்டது.

நன்றி
விவேகவாணி

# யாழ். வைத்தியசாலைக்கு உபகரணங்கள் கொள்வனவு; கொண்டு வருவதில் தாமதம்

(தென்மராட்சி)

யாழ்ப்பாணம் அரசினர் போதனாவைத்தியசாலையில், அமெரிக்காவிலுள்ள சர்வதேச லயன்ஸ்கழகங்களின் தலைமையகத்தின் நிதியுதவியுடன் நிறுவப்படவுள்ள கண்சிகிச்சை நிலையத்துக்கென 49 இலட்சம் ரூபா பெறுமதியான நவீன உபகரணங்கள் கொழும்பில் கொள்வனவு செய்யப்பட்ட போதிலும் பாதுகாப்பு அமைச்சின் உத்தரவும், அனுமதியும் இதுவரை கிடைக்காமையினால் யாழ்ப்பாணம் கொண்டுவரப்படவில்லை.

இந்த நவீன உபகரணங்களை மிக விரைவில் கப்பல் மூலம் கொண்டு வருவதற்கான அனைத்து முயற்சிகளையும் யாழ்ப்பாணத்திலுள்ள லயன்ஸ் கழகங்களின் பிரமுகர்கள் மேற்கொண்டிருந்த போதிலும் அவை சாத்தியப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

யாழ்ப்பாணத்தில் அத்திட்டத்தினை அமுல் செய்வதற்கு சர்வதேச லயன்ஸ்கழகம் இரு வருடத்துக்கு முன்னர் நிதி ஒதுக்கீட்டினைச் செய்திருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும். (க-77)

# துவிச்சக்கர வண்டி மாய மறைவு

(நல்லூர்)

வாசிகசாலையின் முன்பாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த துவிச்சக்கரவண்டி மாயமாய் மறைந்த சம்பவம் அண்மையில் இடம்பெற்றுள்ளது.

வண்ணார்பண்ணை காங்கேசன்துறை வீதியில் அமைந்துள்ள வாசிகசாலை ஒன்றில் பத்திரிகை படித்துவிட்டு வந்துபார்த்த வேளையில், நிறுத்திய துவிச்சக்கர வண்டியைக் காணாததால் உரிமையாளர் ஏமாற்றமடைந்தார். (உ-103)

# கடலோட்டு எந்திரவியல் பயிற்சிநெறி

(சுண்டுக்குளி)

யாழ். பிராந்தியகடலோட்டு எந்திரவியல் கல்லூரியில் குறுகியகால கடலோட்டு எந்திரவியல் பயிற்சிபெற, போட்டிப்பரீட்சை மூலம் 25 பெண்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

மேற்படி கல்லூரி 1973ஆம் ஆண்டு தொட்டு யாழ்ப்பாணத்தில் இயங்கி வருகின்ற போதிலும், அதில் பெண்களையும் இணைத்துக்கொள்வது இதுவே முதல் தடவை என்பது குறிப்பிடத்தக்கது. (உ-110)

# சுத்திகரிப்பு வேலைகள் பூர்த்தி

(யாழ்ப்பாணம்)

யாழ். பிரதான வீதியை உள்ளிட்ட பகுதிகள் மற்றும் கொட்டடி, நாவாந்துறை, சற்குளம், கண்ணபுரம் ஆகிய பகுதிகளிற்கான நீர் விநியோகக் குழாய் சுத்திகரிப்பு வேலைகள் பூர்த்தியடைந்துள்ளதாக மாநகர ஆணையாளர் வே. பொ. பாலசிங்கம் தெரிவித்துள்ளார்.

இந்தஇடங்களில் பைப்மூலம் வரும் (நீர்க்கம்பம்) நீரையும் குடிநீராகப் பயன்படுத்தலாம் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (க-ச)

# மாவீரர் தினத்தையொட்டி பாதுகாப்பு தீவிரம்

(மட்டக்களப்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளின் மாவீரர் வாரம் கடந்த 21-ம் திகதி ஆரம்பமாகியுள்ளதனை அடுத்து மட்டக்களப்பு மாவட்டத்தில் பாதுகாப்பு நடவடிக்கைகள் உசார்ப்படுத்தப்பட்டுள்ளன.

பொலிஸார், இராணுவத்தினர் மற்றும் விசேட அதிரடிப்படையினர் தீவிர கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

மட்டக்களப்பு நகருக்குள் நுழையும் நுழைவாயிலில் உள்ள கோட்டை முனைப் பாலம் இராணுவச்சோதனை அரணில் சோதனைகள் தீவிரமடைந்துள்ளன.

மட்டக்களப்பு கச்சேரிக்குச் செல்லும் நுழைவாயிலிலும் இராணுவம் தீவிரசோதனைகளில் ஈடுபட்டுள்ளது. (ச-60

# மாணவர்கள் முன்வைத்த நாலுஅம்சக் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

அரச அதிபரிடம் கையளிக்கப்பட்டுள்ள மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ள முக்கிய அம்சங்கள் வருமாறு;

பண்டாரவளைப் படுகொலை சூத்திரதாரிகளை உடன் நீதி விசாரணைக்குட்படுத்தி தண்டனை வழங்க வேண்டும் என்றும் தென்பகுதிச் சிறைகளில் உள்ள தமிழ் இளைஞர்களை (கைதிகளை) உடனடியாகத் தமிழ்ப் பகுதிகளுக்கு மாற்ற வேண்டும்.

பத்திரிகையாளர் நிமலராஜனைக் கொலை செய்த கொலைஞர்களை உடன் கண்டு பிடித்து அதனை அம்பலப்படுத்தி சம்பந்தப்பட்டவர்களுக்கு தண்டனை பெற்றுக் கொடுக்க வேண்டும்.

கடற்றொழிலாளர்கள் மீன்பிடிப்பதற்கான நேரத்தையும், மீன்பிடிக்கும் கடல் எல்லையையும் அதிகரிக்க வேண்டும் என்றும் அம்மகஜரில் கேட்கப்பட்டுள்ளது. (வ)

# வவுனியாவில் பாதுகாப்பு தீவிரம்

(வவுனியா)

மாவீரர் தினத்தை முன்னிட்டு வவுனியாவில் பாதுகாப்பு ஏற்பாடுகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

அடிக்கடி தேடுதல்களும், திடீர் சோதனைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மாவீரர் தினத்தை முன்னிட்டு விடுதலைப்புலிகள் பாரிய தாக்குதல்களை மேற்கொள்ளலாம் என்ற அச்சம் காரணமாகவே திடீர் சோதனைகளும், தேடுதல்களும் இடம்பெற்றுவருவதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (ம)

# பயணிகள் சேவையில் லங்காமுடித்த ஈடுபடும்

## அமைச்சர் டக்ளஸ் நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

'லங்கா முடித்த' கப்பல் யாழ்ப்பாணத்திற்கும் திருகோணமலைக்குமிடையிலான பயணிகள் கப்பல் சேவையில் ஈடுபடவுள்ளதாக வடமாகண புனர்வாழ்வு அமைச்சு அறிவித்துள்ளது.

'சிற்றி ஒவ் றிங்கோ' கப்பல் சேவை மீளவும் ஒழுங்குபடுத்தப்படும் வரை, இக்கப்பல், பயணிகள் போக்குவரத்துச் சேவையில் ஈடுபடுமென்று தெரிவிக்கப்படுகிறது.

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின்வழித்துணையுடன் நடைபெற்ற சிற்றி ஒவ் றிங்கோ கப்பல் சேவை கடல் கொந்தளிப்பு காரணமாக, பருத்தித் துறையில் பயணிகளை பாதுகாப்பாக ஏற்றி இறக்க முடியாத சூழ்நிலையில் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது.

இதே வேளை யாழ் திருமலை பயணிகள் கப்பல் சேவையை நடத்துவதற்கு வடக்கு புனர்வாழ்வு, புனரமைப்பு தமிழ் விவகார இந்து கலாசார அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பாதுகாப்பு அமைச்சு, மற்றும்உயரதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு லங்கா முடித்தாவை சேவையில்ஈடுபடுத்தவுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

அனேகமாக இக் கப்பல் சேவை இவ்வார இறுதியில் ஆரம்பமாகுமென எதிர்பார்க்கப்படுகிறது. (இ)

# வன்செயலில் பாதிப்புற்ற மக்களுக்கு நட்டஈடு

(பண்டாரவளை)

பண்டாரவளை பிந்துனுவெவ புனர்வாழ்வு முகாம் படுகொலைகளை அடுத்து இடம்பெற்ற வன்செயல்களினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நஷ்டஈடு வழங்கப்பட்டுள்ளது.

கால்நடை அபிவிருத்தி அமைச்சர் ஆறுமுகம் தொண்டமான் வழங்கிய பணத்தில் இந்த நஷ்டஈடு வழங்கப்பட்டுள்ளது.

இந்த நஷ்டஈடுகள் கினிகத்தன, தலவாக்கல ஆகிய பகுதிகளிலுள்ள மக்களுக்கே வழங்கப்பட்டுள்ளது

நுவரெலியா மாவட்ட அரசஅதிபர் தனுசேனா ஹெட்டிஆராய்ச்சியினால் திரட்டப்பட்ட புள்ளிவிபர அடிப்படையிலேயே இந்த நஷ்டஈடுகள் வழங்கப்பட்டு உள்ளது. (வ)

# தாக்குதல்களை முறியடிக்க கொழும்பில் நடவடிக்கை

(கொழும்பு)

விடுதலைப்புலிகளின் மாவீரர்வார குண்டுத்தாக்குதல்களைமுறியடிக்கும்வகையிலான அனைத்து நடவடிக்கைகளையும் கொழும்பில் மேற்கொண்டிருப்பதாக கொழும்பு பிரதி பொலிஸ்மா அதிபர் போதிலியனகே தெரிவித்துள்ளார்.

மாவீரர் தினத்தை ஒட்டி புலிகளின் அச்சுறுத்தல் தொடர்பாக அவர் விளக்கமளிக்கையில்,

இக்காலப் பகுதியில் கொழும்பிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் குண்டுத்தாக்குதல்களை நடத்தி பெரும் சேதங்களை ஏற்படுத்தும் வகையில் புலிகளின் தற்கொலைக் குண்டுதாரிகள் ஊடுருவியுள்ளனர் என்பது சந்தேகத்திற்கிடமின்றிதெரிய வந்துள்ளது.

தற்கொலைக் குண்டுதாரிகளின் நாசகார நடவடிக்கைகளை எதிர்கொள்வதற்கு வேண்டிய அனைத்துச்செயற்பாடுகளும் எம்மால் முன் எடுக்கப்பட்டுள்ளது.

இதனடிப்படையில், விஷேட பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், பாதுகாப்பு படையினர் மற்றும் பொலிஸார் உசார் நிலையில் வைக்கப்பட்டுள்ளனர் எனவும் தெரிவித்துள்ளார்.

கடந்த வருட பிற்பகுதியில் இருந்து இற்றைவரை புலிகள் ஏழு குண்டுத்தாக்குதல்களை கொழும்பில் நடத்தியுள்ளதுடன், இப்பணிகளுக்காக 46 புலி இயக்கஉறுப்பினர்கள் இதுவரை கொழும்பு நகரில் பிரவேசித்திருப்பதாகவும் தெரிவித்துள்ளார். (உ)

## யாழ்.நவீன சந்தைக் கட்டடத்தில்

# திறக்கப்படாத கடைகள் இயங்கவைக்கப்பட வேண்டும்

## வணிகர் சங்கம் கோரிக்கை

(தென்மராட்சி)

யாழ்ப்பாணம் நவீன சந்தைக் கட்டட வளாகத்தில் நீண்டகாலமாகத் திறக்கப்படாமல் இருக்கும் கடைகளை குத்தகைக்கு எடுத்தவர்களுக்கு அல்லது வேறுஆட்களுக்கு மாற்றிக் கொடுக்க யாழ்ப்பாண மாநகரசபை உடன் உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

என யாழ்ப்பாணம் வணிகர் சங்கப் பிரதிநிதிகள் அண்மையில் யாழ் மாநகர சபையின் பிரதிமுதல்வர் நடராஜா ரவிராஜிடம் நேரில் கோரிக்கை விடுத்துள்ளனர்.

யாழ்ப்பாண நகரிலுள்ள பிரதிமுதல்வரின் உத்தியோக பூர்வ வாசஸ் தலத்தில் நடைபெற்ற சந்திப்பில் வணிகர் சங்கத் தலைவர் எஸ். சற்குணராஜா, செயலாளர் எஸ். குலரத்தினம் உட்பட நிர்வாக சபை உறுப்பினர்களும்பங்கு கொண்டிருந்தனர்.

பிரதி முதல் வருடனான இச் சந்திப்பின் போது யாழ்ப்பாண நகரின் வடிகால்அமைப்புகள் நீண்டகாலமாகத்திருத்தம் செய்யப்படாமல் இருப்பதால் நகருக்கு வருபவர்கள் பல சிரமங்களை அனுபவித்து வருகின்றனர் எனவும்

நவீன சந்தை மத்திய பேருந்து நிலையப் பகுதியில் நவீன மல சல கூடம் அமைக்கப்பட வேண்டிய அவசியம் பற்றியும் வணிகர் சங்கம் பிரதி முதல்வரிடம் எடுத்துக் கூறியிருந்தது.

இதனைத் தொடர்ந்து பிரதி முதல்வர் அங்குகருத்து வெளியிடுகையில்.

நவீன சந்தை மத்திய பேருந்து நிலையப் பகுதியில் 5 நவீன மலசல கூடங்கள் அமைக்கப்பட உடன் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் வடிகால் அமைப்புத் திருத்த வேலைகளையும் மேற்கொள்வதற்கான உத்தரவுகள் பிறப்பிக்கப்படும் எனவும் தெரிவித்தார்.

பிரதி முதல்வருடன் உதவி ஆணையாளர் எஸ். தணிகாசலம், கணக்காளர், மற்றும் பொறியியலாளரும் சமுகமளித்திருந்தனர். (க-77)

★ நீதிமன்ற தீர்ப்பை அடுத்து✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱

# இலங்கை உட்பட ஆசிய நாட்டவர் பலர்

# ஜேர்மனியில் நிர்க்கதி நிலையில்

(பேர்ண்)

ஜேர்மன் நாட்டில் நீதிமன்றம் ஒன்றில் அண்மையில் வழங்கப்பட்ட தீர்ப்பை அடுத்து அந்நாட்டில் வாழும் இலங்கை உட்பட ஆசிய நாட்டவர் பலர் பெரும் அச்ச நிலையில் வாழ்ந்துவருவதாக ஜேர்மனியிலிருந்து வரும் செய்திகள் தெரிவித்துள்ளன.

அச்செய்திகள் மேலும் தெரிவிக்கையில்;

ஜேர்மனியில் அகதிகளாக அங்கீகரிக்கப்பட்டு, அதற்குரிய ஆவணங்கள் மற்றும் கடவுச் சீட்டுக்கள் வழங்கப்பெற்றவர்களை கூட, தேவை ஏற்படும்போது, அவற்றை மீளப் பெற்றுக்கொண்டு அவர்களது சொந்த நாட்டுக்குத் திருப்பி அனுப்ப முடியும்.

ஜேர்மனிய ''ரயின்லான்பல்ஸ்'' மாநிலத்தைச் சேர்ந்த நீதிமன்றம் ஒன்று மேற்படி தீர்ப்பைக் கூறியுள்ளது.

சொந்த நாட்டில் உயிராபத்து உண்டெனற காரணத்தினால் ஜேர்மனியில் அகதிக் கடவுச்சீட்டு வழங்கப்படுகிறது.

ஆனால் அதே நபருக்கு, சொந்த நாட்டில் உயிராபத்து இல்லை என்று கருதும் பட்சத்தில் அவருக்கு வழங்கப்பட்ட அகதி அந்தஸ்தும், கடவுச் சீட்டும் மீளப்பெறப்பட்டு சொந்த நாட்டுக்கு திருப்பியனுப்பும் அதிகாரம் நீதிமன்றத்திற்கு உண்டெனவும் அந் நீதிமன்றம் தீர்ப்புக் கூறியுள்ளது.

அகதி அந்தஸ்து பெற்று, குறிப்பாக வேலை செய்யாது சமூக உதவிப் பணத்தில் வாழ்ந்து கொண்டு தமது தாய் நாட்டுக்குச் சென்று வருவது கண்டுபிடிக்கப்பட்டாலும் இதே நடைமுறை பின்பற்றப்படும் எனவும் நீதிமன்றம் கூறியுள்ளது.

மேற்படி நீதிமன்றத் தீர்ப்பு, ஜேர்மனியில் அரசியல் தஞ்சம் பெற்று வாழும் இலட்சக்கணக்கான அகதிகளுக்கு அச்சத்தை ஏற்படுத்தியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (உ)

## உலக தரிசனம்

## தென்கொரிய அதிபர் விஜயம்

(சியோல்)

தென்கொரிய அதிபர் இன்று சிங்கப்பூர் செல்லவுள்ளார்.

மூன்று நாட்கள் பயணமாக செல்லும் இவர் சிங்கப்பூர் அதிபர் எஸ். ஆர். நாதன் மற்றும் பிரதமர் ஆகியோரைச் சந்தித்து கலந்துரையாடுவார்.

இருதரப்பு பொருளாதார கலாசார உறவுகள் பற்றிப் பேசுவார் என்று தெரிவிக்கப்படுகிறது. (து)

# ஜம்முவில் நேற்று கடையடைப்பு ஓட்டுநர்கள் சுடப்பட்டதன் எதிரொலி

(ஸ்ரீநகர்)

ஜம்முகாஷ்மீரில் ஓட்டுநர்கள ஐந்துபேர் சுட்டுக் கொல்லப்பட்டதை அடுத்து நேற்று பூரண ஹர்த்தால் நடைபெற்றது.

நேற்று ஜம்முவில் வியாபாரிகள கதவடைப்புப்போராட்டம் நடத்தினர். இதனால் வணிகர் கடைகள் மற்றும் தொழிற்சாலைகள், பாடசாலைகள், அரசஸ்தாபனங்கள் எவையும் இயங்கவில்லை.

பேருந்துகள் ஓடவில்லை நகரே வெறிச்சோடிக்கிடந்தது எனினும் அத்தியாவசிய சேவைகள் நடைபெற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மேலும். பாரியவாகனங்களின் ஓட்டுநர்களைச் சுட்டவர்கள் தீவிரவாத இயக்கத்தைச் சேர்ந்தவர்களா இன விரோதிகளா என்பதுபற்றி மத்திய புலனாய்வுத்துறை தீவிரவிசாரணை மேற்கொண்டுவருவதாக அறியப்படுகிறது. (து)

## இந்தியா கேட்டாலன்றி இங்கிலாந்து தலையிடாது

(சென்னை)

இந்தியா கேட்டாலன்றி, இலங்கைத்தமிழர் பிரச்சினையில் இங்கிலாந்து தலையிடாது என பிரிட்டன் வெளிவிவகார அமைச்சர் பீற்றர் ஹெயின் தெரிவித்துள்ளார்.

இலங்கை விஜயம் மேற்கொள்வதற்கு முன்னதாக, இந்தியாவுக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்ட பீற்றர் ஹெய்ன், புதுடில்லியில் இந்திய வெளியுறவு அமைச்சர் ஜஸ்வந்சிங் மற்றும் முக்கிய பிரமுகர்களை சந்தித்துவிட்டு சென்னைசென்ற வேளையில் செய்தியாளர் மாநாடொன்றில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இலங்கையின் இனப்பிரச்சினை தீர்வு தொடர்பான நோர்வே அரசின் முயற்சிகளுக்கு தாம் ஆதரவு வழங்கிவருவதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார். (உ)

## பாகிஸ்தான் - ஈரான் அமெரிக்கா தடைவிதிப்பு

(வாஷிங்டன்)

பாகிஸ்தானுக்கும் ஈரானுக்கும இடையேஅமெரிக்கா புதிய தடைகளை விதித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

பாகிஸ்தானும் ஈரானும் சீனாவிடமிருந்து ஏவுகணை உதிரிப்பாகங்களை கொள்வனவு செய்ததை அடுத்தே அமெரிக்கா இத்தடைகளை விதித்திருப்பதாகத் தெரிவிக்கப் படுகிறது என்று அமெரிக்க வெளியுறவு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்

இதேவேளை, அமெரிக்காவில் இவ்வறிக்கையையும் சீனா விடுத்திருக்கும் அறிக்கையையும் இந்தியா உன்னிப்பாகக் கவனித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (து)

## பெங்களூரில் புதிய நகரம் சர்வதேச தரமானதாம்

(சென்னை)

சர்வதேச தரத்திலான டெனிஸ் நகரம் ஒன்று பெங்களூரில் உருவாகி வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

டெனிஸ் வீரர்மகேஸ்பூபதியின் தந்தையான கிருஷ்ணா பூபதியும் லைற் நிறுவனமும் இணைந்து இந்த நகரை நிர்மாணிக்கின்றனர்.

இந்த நகரம் இரண்டாயிரத்து இரண்டாம் ஆண்டு முடிவடையுமென்றும் டெனிஸ் போன்ற விளையாட்டு உபகரணங்களை உற்பத்தி செய்யும் நகரமாக இது விளங்குமென எதிர்பார்க்கப் படுகிறது.

இந்த டெனிஸ் நகரம் சர்வதேச அந்தஸ்துடன் விளங்குமென்றும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த நகரத்தில் விளையாட்டு மைதானம் கடைத்தொகுதிகள் ஹோட்டல் வசதிகள் மற்றும் குடியிருப்பு வசதிகள் மற்றும் நீச்சல்தடாகங்கள் இணைய வசதிகள் எல்லாம் அமைய இருப்பதாகவும் இதன் அமைப்பாளர் ஒருவர் தெரிவித்தார், (து)

## ஸ்பெயின்முன்னாள்மந்திரி சுட்டுக் கொல்லப்பட்டார்

(மாட்ரிட்)

ஸ்பெயினின் முன்னாள் அமைச்சர் சுட்டுக்கொல்லப் பட்டுள்ளார்.

ஸ்பெயினின் வடகிழக்கு பிரதேசத்தில் உள்ள அவரது வீட்டில் வைத்தே சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

அறுபத்திமூன்று வயதான முன்னாள் சோசலிச கட்சியின் சுகாதார அமைச்சரான எல்கிறேட் வீட்டுக்கு வெளியே நடமாடிக்கொண்டிருந்தபோது இனந்தெரியாதோரால் சுட்டுக்கொல்லப் பட்டிருக்கிறார்.

இருடைய கொலைக்கும் ஈ. வி. எவ் அமைப்புக்கும் தொடர்பு இருக்கலாமென்று அரசுவட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (து)

## மாலைதீவில் கைதான தமிழக மீனவரை பிணையில் விடமுயற்சி

(சென்னை)

மாலைதீவு சுங்க அதிகாரிகள் தமிழ்நாட்டைச் சேர்ந்த மீனவர்களைக் கைது செய்துள்ளனர்.

கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த எட்டு மீனவர்கள் கேரளம், கிளிஞ்சல் பகுதியில் மீன்பிடிக்கச்சென்றார்களென்றும் அவர்களின் மீன்பிடிக்கலங்கள் திசை மாறிச்சென்று பலநாட்கள் அலைந்து இறுதியில் மாலைதீவுக்கரையை அடைந்தார்களென்றும் தெரிவிக்கப்படுகிறது.

இதனை அடுத்து தமிழக மீனவளத்துறை அமைச்சர் ஜெனிபாசந்திரன் மாலைதீவிலுள்ள இந்திய தூதுவரிடம்தொடர்பு கொண்டு அம் மீனவர்களை தமிழகத்திற்கு கொண்டுவரும் முயற்சியில் ஈடுபட்டுள்ளார் (து)

## வாழைப்பழம் விலைவீழ்ச்சி

(அரியாலை)

யாழ்: குடாநாட்டுச்சந்தைகளில் வாழைப்பழத்தின் விலை வீழ்ச்சியடைந்துள்ளது.

கடந்த சில நாட்களாக தொடர்ந்த மழை மற்றும் காற்று காரணமாகவே இவ் விலைச்சரிவு ஏற்பட்டுள்ளது.

கதலி வாழைப்பழம் கிலோ 10ரூபாவாகவும் இதரை வாழைப்பழம் கிலோ 15ரூபாவாகவும் சந்தைகளில் விற்பனையாகிறது. (உ-106)

## உல்பா-காங்கிரஸ் தொடர்பு வலுக்கிறது

[புதுடில்லி]

அஸ்ஸமில் தனிநாடுகோரி போராடிவரும் உல்பா அமைப்புக்கும் காங்கிரஸ் கட்சிக்கும் இடையே நெருங்கிய தொடர்பு இருப்பதாக பாரதிய ஜனதாக்கட்சி கூறுகிறது.

அண்மையில் அஸ்ஸாம் மாநிலத்துக்கு சென்று பல நாட்கள் அங்குள்ள நிலைமைகளை ஆராய்ந்து வந்த பாரதீய ஜனதாக்கட்சி இது பற்றிக் கூறுகையில்; தனிநாட்டு பிரிவினை உல்பா அமைப்புக்கும் காங்கிரசுக்கும் நெருங்கிய தொடர்புகள் இருப்பது கண்டறியக் கூடியதாக இருப்பதென்றும் இது பற்றி மத்திய அரசு தீவிர விசாரணை நடத்தவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டது.

அஸ்ஸாமிலுள்ள உல்பா இயக்கத்திற்கும் பாகிஸ்தானில் உள்ள தீவிரவாத இயக்கங்களுக்கும் நெருங்கிய தொடர்பு உள்ளது.

மத்திய அரசு காங்கிரஸ் விடயத்தில் மிக அவதானமாக இருக்க வேண்டும் என்றும் பாகிஸ்தானிய தீவிரவாதிகள் ஏன் காங்கிரஸின் கூட்டாளிகளாக இருக்க முடியாது என்றும் பாரதீய ஜனதாக்கட்சி கேட்டுள்ளது. (து)

# திருப்பி அழைத்த தூதுவர் பற்றி எகிப்து மீள் பரிசீலிக்கவும்

## அமெரிக்கா வேண்டுகோள்

(வாஷிங்டன்)

எகிப்து தனது தூதுவரை இஸ்ரேலில் இருந்து திருப்பி அழைத்ததை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று கூட்டாக அமெரிக்காவும்இஸ்ரேலும் கேட்டுள்ளன.

இஸ்ரேலிலிருந்து தனது தூதுவரைத் திருப்பி அழைத்தமை ஒரு அவசரமானமுடிவு என்றும் இதனை மறுபரிசிலனை செய்ய வேண்டும் என்றும் அமெரிக்கா நேற்று வெளியிட்ட செய்தியில் கேட்டுள்ளது.

இந்த அவசர முடிவால் இஸ்ரேல் பலஸ்தீனப் பேச்சுகளுக்கு பங்கம் ஏற்படும் என்றும் முடிவை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்றும் அமெரிக்கா அச் செய்தியில் வலியுறுத்தியுள்ளது.

இதேவேளை இஸ்ரேல் தான் தொடர்ந்தும் தனது தூதுவரை எகிப்திலே விடப்போவதாகவும் திரும்பி அழைக்கப் போவதில்லையென்றும் இஸ்ரேலுடன்பேச்சுவார்த்தைகள் நடைபெறுவதாகவும், எகிப்து திருப்பி அழைத்த தூதுவரை தமது நாட்டுக்கு அனுப்ப வேண்டும் என்றும் இஸ்ரேல் பிரதமர் எகிட் பராக் தெரிவித்தார்.

இதே வேளை எகிப்து தனது முடிவில் எந்த மாற்றமும் செய்ய முடியாதென்று அறிவித்து விட்டது.

இதையடுத்து இஸ்லாமிய நாடுகள் ஐ.நா பாதுகாப்பு சபையை அவசரமாகக் கூட்ட வேண்டும் என்று வேண்டுகோள்விடுத்துள்ளன. (து)

# தாய்லாந்தில் பெருவெள்ளம் ஒரு இலட்சம் பேர் பாதிப்பு

[பாங்கொக்]

தாய்லாந்து நாட்டில்வெள்ளத்தினால் ஒரு இலட்சம்பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்

நகரின் ஒரு கிலோ மீற்றர் பகுதி வீடுகள் வெள்ளத்தில் மூழ்கிக் கிடப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

பல பள்ளிக் கட்டடங்களும் மதகுகள் சிலவும் பாலங்கள் சிலவும் இடிபட்டிருக்கின்றன.

மின்சாரம் துண்டிக்கப்பட்டிருப்பதால் பெரிய வைத்திய சாலைகள் இருளில் மூழ்கியிருப்பதாகவும் முக்கிய அறுவை சிகிச்சையில்லாமல் நோயாளிகள் அவஸ்தைப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த பதினொரு ஆண்டுகளுக்குப் பிறகு இந்த பாரிய வெள்ள அனர்த்தம் ஏற்பட்டிருப்பதாகவும் மீட்புப் பணிகள் துரிதமாக நடைபெறுவதாகவும் தாய்லாந்து உள்துறை அமைச்சு தெரிவித்துள்ளது. (து)

'யாகாவாராயினும் நாகாக்க காவாக்கால் சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு' - குறள்

# வலம்புரி

## நெஞ்சு பொறுக்குதில்லை

யாழ்.மாநகர சபையின் சுகாதார வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி இ.தெய்வேந்திரன் அவர்களைக் குறித்து யாழ் மாநகரசபையில்சில உறுப்பினர்கள் விடுத்த செய்திகள் பல உள்ளங்களை வேதனைப்படுத்தியுள்ளது.

இந்த மண்ணில் மக்களோடு மக்களாகஇருந்து வைத்தியத்துறைக்குஅளப்பரும் சேவையாற்றிய வைத்திய கலாநிதி தெய்வேந்திரனைப்பற்றிகுறையாகப் பேசும் தகுதி- தரம் யாழ். மாநகரசபையின் எந்த உறுப்பினருக்கும் இல்லையென்பதை மக்கள் சமூகம் எடுத்துக் கூறும்.

அத்திபூத்தால் போல் தமது வசதிக்கேற்ப முன் அறிவித்தலின்றி கூட்டங்கள் கூட்டும் திடீர் நாடகத்தில் பங்கேற்கும் பாத்திரங்கள், தாம் எண்ணியபடி நடப்பதற்கு வைத்திய கலாநிதி தெய்வேந்திரன் போன்ற உயரியபண்புடையவர்கள் ஒரு போதும் இசையமாட்டார்கள் என்பது கவரிமான் வரிசையிலுள்ளவர்களுக்கே தெரியும்.

வட புலத்தில் ஏற்பட்ட 95 ஆம் ஆண்டு இடம்பெயர்வைத்தவிர ஏனைய இடம்பெயர்வுகளின் போதெல்லாம் மக்கள்கூட்டம் மாநகர சபைப் பகுதிகளுக்குள்ளேயே வந்து குவிந்தது, அப்போதெல்லாம் யாழ். மாநகர சபையின் வைத்திய அதிகாரியாக தெய்வேந்திரன் கடமையாற்றாதிருப்பின் அரைவாசி மக்கள்மரணத்தின் விளிம்பிற்கே சென்றிருப்பர்.

பல் வகைத் திட்டங்களை உருவாக்கி உயிர் காத்த அவரின் சேவையைமக்கள் ஒரு போதும் மறக்க மாட்டார்கள்.

ஆனால் இன்றைய மாநகர சபையின் மக்கள் ஆட்சி அவர் விடயத்தில் அறம்தவறிப்போவதுதாமரைக் குளத்திலிருக்கும் தவளைக்கு தாமரையிலிருக்கும் தேனைத் தெரியாதென்பதையே தெளிவு படுத்துகிறது

உலக சுகாதார ஸ்தாபனம் முதல் கொண்டு சர்வதேச சுகநல அமைப்புகள் வரை வைத்திய கலாநிதி தெய்வேந்திரனை வரவேற்கத் தயாராகஇருக்கும் இவ்வேளையில்,


மாநகர சபை உறுப்பினர்கள் சற்றுப் பொறுமையுடன் சிந்திக்க வேண்டும். எல்லோரிடமும், எப்படியும் நடக்கலாமென்ற யாப்பை மாற்றி நிதானத்துடன் சுமுகமான முறையில் நமக்குள் ஏற்படும் பிணக்குகளைத் தீர்க்கமுனைய வேண்டும். அதனையே மக்கள் வரவேற்பர்.

---

**வெள்ளி நற்சிந்தனை**

## ஆன்ம ஈடேற்றத்திற்கு வழிவகுக்கும்

# இறை சக்தியை போற்றி நற்பேறடைவோம்



நாம் இதற்கு முன் எண்ணற்ற பிறவிகள் எடுத்து இருக்கிறோம். கடவுளை ஒப்புக் கொள்ளாத பௌத்த சமயமும், சமணசமயமும் கூட, உயிர்களுக்கு முற்பிறப்பு உண்டு என்பதை ஒப்புக் கொள்கின்றன.

அந்த முற்பிறப்புகளில் நாம் மனிதராய்த்தான் இருந்தோம் என்று சொல்வதற்கில்லை. மிருகமாய் இருந்திருக்கலாம், பறவையாய் இருந்திருக்கலாம், மரமாய் இருந்திருக்கலாம், மீனாய் இருந்திருக்கலாம், ஒவ்வொரு பிறவியிலும் நாம் ஒவ்வொருவகையான அனுபவங்களைப் பெற்று இருப்போம்.

அந்த அனுபவங்கள் யாவை என்பது இப்போது நமக்கு நினைவு இராது. அவை எல்லாம் மறந்து போய் விட்டன. அதாவது நம் உள்ளத்தின் அடித்தளத்தில் போய் அவை உறங்கிக் கிடக்கின்றன.

அப்படி உறங்கிக் கிடப்பவை எல்லாம் ஒரேசமயத்தில் விழித்து எழுந்து நம் மனத்தின் மேற்பரப்புக்கு வந்து விடுமேயானால் நம்மால் தாங்கமுடியாத ஒரு பெரும் குழப்பத்துக்கு நாம் ஆளாகிவிடுவோம். பைத்தியம் பிடிப்பதைக் காட்டிலும் பலமடங்கு கோளாறான நிலை ஒன்று நமக்கு ஏற்பட்டு விடும். அப்படியெல்லாம் ஏற்பட்டு விடாமல், நம்முடைய அனுபவக் குவியல் இந்தப் பிறவிக்கு ஏற்றவைகளை மட்டுமே தேர்ந்து எடுத்து. அவற்றிலும் எது எது, எப்போது, எப்போது நமக்குப் பயன்படும் என்பதைத் தீர்மானித்து, அதை, அதை, அப்போது அப்போது நமது உள்ளத்தின் மேல் தளத்துக்கு அனுப்பிக் கொண்டு இருக்கிறது. ஓர் அரும் பெரும் அறிவுசக்தி, அந்த அறிவுசக்திதான் மூலாகாரத்திலிருந்து எழும் பராசக்தி!.

இந்தப் பராசக்தியே உலகில் உள்ள எல்லா உயிர்களிடத்திலும் நான்.,. நான் என்ற உணர்வு வடிவத்தில் விளங்கிக் கொண்டு இருக்கிறது. அந்த உணர்வுக்கே பரா அகந்தை என்று பெயர்.

உடல்கள் தோறும் வாழுகின்ற உயிர்கள் அனைத்தும் இந்தப்பரா அகந்தையிலிருந்து தோன்றியவைகளே!. உலகு அனைத்தும் அழிந்து வெறும் பாழாகிப் போகின்ற ஊழிக்காலத்திலே உயிர்கள் எல்லாம் அந்தப் பரா அகந்தையினிடத்தில் போய்த்தான் ஒடுங்கிக்கிடக்கின்றன.

**ஐந்தொழில்**

படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்னும் ஐந்தொழில்களையும் இறைவன் இடைவிடாது நடத்தி வருகின்றான், அப்படி நடத்தக் கூடிய சக்தி, அவனுக்கு எங்கிருந்து வந்தது? பரா அகந்தை என்னும் பராசக்தியே அவனிடத்தில் அந்த ஆற்றில் வடிவாக விளங்குகிறான். அவனுடையஇச்சை வடிவாகவும், அவனுடைய அறிவு வடிவாகவும், அவனுடைய செயல் வடிவாகவும் அவளேதான் விளங்குகிறாள், ஒப்பு உயர்வு அற்ற ஆனந்தமே அவளது உண்மையான வடிவம்.

அந்தப் பராசக்தி தான், நம் ஒவ்வொருவருடைய மூலாதாரத்திலும் பராவாக்காக நின்று, நமக்கு அறிவையும், அனுபவத்தையும் கொத்துக் கொண்டு இருக்கிறாள், அந்த எண்ணங்கள் உணர்ச்சிகள் ஆகியவற்றின் மூலம் அவள்தான் உலக வாழ்வில் நம்மை இயக்கிக் கொண்டு இருக்கிறாள்.

நமது எண்ணங்களுக்கு அடியில் இறைவனே விளங்குகிறான். ஒரே கடவுளை ஆண்பாலாகவும், பெண்பாலாகவும் ஒன்றன் பாலாகவும் குறிப்பிட்டுப் பேசுவது நமது

**தமிழ்வாணன்**

பழமையான மரபு அந்த மரபின்படி, கடவுளை ஆண்பாலாகக் குறிப்பிடும் போது இறைவன் என்கிறோம். பெண்பாலாகக் குறிப்பிடும் போது அம்பிகை அல்லது பராசக்தி என்கிறோம் ஒன்றன் பாலாகக் குறிப்பிடும் போது சிவம் அல்லது பிரம்மம் என்கிறோம். ஆகவே இறைவன் வேறு. பராசக்தி வேறு அல்ல. இருவரும் ஒருவரே, ஆகையால் பராவாக்கில் நின்று நம்மை ஆட்டி வைத்துக் கொண்டு இருப்பவன் அந்த ஆண்டவனே ஆவான்.

**குதிரை**

குதிரை என்ற சொல்லை நம் காதிற் கேட்கும் படியாக ஒருவன் சொல்லுகிறான். உடனே அந்தச் சொல்லில் உள்ள ஒரு சத்தியானது, நம் உணர்வின் அடித்தளத்திலே உறங்கிக் கிடக்கும் குதிரையின் உருவத்தை நமது மனக்கண்முன் கொண்டுவந்து நிறுத்துகிறது, ஆனால் சில சமயங்களில், குதிரை என்னும் சொல்லை எவரும் நமது கேட்கப் பேசாமல் இருக்கும்போதே, திடீர் என்று நமக்குக் குதிரையின் நினைவு வருகிறதே அது எப்படி? உலக மொழிகளின் எழுத்துக்கள் அனைத்தும் பராவாக்கில் நுண்ணிய வடிவிலே விளங்கிக் கொண்டு இருக்கின்றன. அந்த எழுத்துக்குவியலில் கு, தி, ரை என்னும் எழுத்துக்களும் இருக்கத்தானே வேண்டும்? அந்த மூன்று எழுத்துகளையும் பொறுக்கி எடுத்து, அவற்றில் பொதிந்துள்ள ஞாபக சக்தியைக் கிளறிவிடுகிறான் இறைவன், உடனே எவ்வகையான வெளித்தூண்டுதலும் இல்லாமல் குதிரையின் உருவம் நமது நினைவுக்கு வருகிறது.

எந்த நேரத்தில் எந்தச் சங்கதியை நமக்கு நினைவு படுத்த வேண்டும் என்பது இறைவனுக்குத்தான் தெரியும், அதை அவன் நமக்கு உள்ளே இருந்து கொண்டும் நினைவு படுத்தலாம், வெளியே உள்ள பிறரைக் கொண்டும் அவன் நினைவு படுத்தலாம், எப்படியும் அவன்தான் நமக்கு நினைவு படுத்த வேண்டும், அவனுடைய துணையில்லாமல் எதையும் நாமாகவே நினைவு படுத்திக் கொள்ள முடியும் என்று எண்ணுவது ஒரு மாபெரும் அறியாமையே ஆகும்.

---

**நூல் மறுபிரசுரம்**

வடகோவை ஸ்ரீ சித்திர வேலாயுதசுவாமி ஆலய பஜனை, நாமவாளிப் பாடல் நூல் மறுபிரசுரம் செய்து வெளியிடப்பட்டுள்ளது.

[செ-103]

---

# இலங்கையில் சமாதானம் ஏற்படுத்த பாப்பரசரும் பாடுபடுவார்?

(கொழும்பு)

இலங்கையில் சமாதானம் ஏற்பட ஏற்ற உதவிகள் புரிய வேண்டும் என பாப்பரசரிடம் ஜெயலத் எம். பி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ரோமாபுரியில் நடைபெற்ற கத்தோலிக்க பாராளுமன்ற உறுப்பினர்கள் மாநாட்டில் இலங்கையில் இருந்து கலந்து கொண்ட ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த ஜெயலத் எம்.பி.பாப்பரசரை நேரடியாக சந்தித்து உரையாடிய வேளையிலேயே இவ்வேண்டுகோளை தான் விடுத்திருப்பதாக தெரிவித்துள்ளார்.

இலங்கையின் இனப்பிரச்சினைத் தீர்வில் நோர்வேயின் மத்தியஸ்தத்துடன்சமாதான முயற்சிகள் முன்னெடுக்கப் பட்டுள்ள இவ்வேளையில், உலக சமாதானத்தின் தந்தையாகிய தங்களும் பங்களிப்பு நல்கி உதவி புரிய வேண்டும் என மேலும் கேட்டுக்கொண்டதாக அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் போரினால் பாதிக்கப்பட்ட வடக்குக் கிழக்கு நிலவரம் தொடர்பாக குறிப்பாக வன்னியின் நிலை குறித்தும் ஜெயலத் எம்.பி.பாப்பரசருக்குவிளக்கி கூறியுள்ளார். (உ)

---

# யாழ். மாநகர சுகாதார பகுதியினரின் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

இளைஞர், யுவதிகள், அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், குடும்ப நல சேவைகள் திட்டம் போன்றவற்றை முன்னெடுக்கும் முகமாக ஐரோப்பிய ஒன்றியம், மற்றும் ஐக்கிய நாடுகள் சனத்தொகை நிதியத்தின் உதவியுடன் யாழ். மாநகர சுகாதாரப் பகுதியினர் கருத்தரங்குகளைத் தொடராக நடத்தி வருகின்றனர்.

நேற்றும், இன்றும் வண்ணார்பண்ணை பெரிய புலம் மகாவித்தியாலயத்திலும் ஏனைய தினங்களில் நாவலர் கலாசார மண்டபத்திலும் இக் கருத்தரங்குகள் நடைபெற உள்ளதாகவும் தெரிவித்துள்ளன.

ஆசிரியர்கள், சமூகத் தலைவர்கள், உயர்தர வகுப்பு மாணவர்கள் பங்கு பெற ஏற்பாடுகள் செய்யப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு நிகழ்ச்சியிலும் 60 பேர் வரையில் பங்கு பற்ற ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

சமகால வம்சவிருத்தி சுகாதாரப் பிரச்சினைகள், இளைஞர்கள் யுவதிகள் மற்றும் கட்டிளமைப் பருவத்தினரிடையேநோய் நிலைகள, மதுபானம், போதைவஸ்துக்கள புகையிலையினால் வரும் விளைவுகளும் தடுப்பு முறைகளும், பாலியல் தொடர்பு நோய்கள் பற்றியும்குறிப்பாக எய்ட்ஸ் நோயின் தோற்றுவாய், சுகாதார, சமூக, பொருளாதார விளைவுகளும் அவற்றைத் தடுக்கும் வழிவகைகளும் தற்போதைய சூழலில் உளவளத் துணையை எவ்வாறு சமூகத்தின் நன்மைக்குப் பயன்படுத்தலாம் என்பதுபற்றியது.

24 நிகழ்ச்கிகள் நகரின் பல்வேறு பகுதிகள் (அல்லது வேறு பகுதிகள் சமூக/ கல்வி நிறுவனங்கள் விரும்பினால்) நடத்தப்படவுள்ளன.

இந்நிகழ்ச்சிகளை ஒத்துழைத்து தமது பகுதிகளில் நடத்த விரும்புவோர் எமது சுகாதார போதனாசிரியருடனோ அல்லது எமது நகர்ப்புற அடிப்படைச் சேவைகள் திட்ட அலுவலருடனோ தொடர்பு கொண்டு ஒழுங்கு செய்யலாம் என்றும் மேற்படி அழைப்பினர் தெரிவித்துள்ளனர். ]க]

---

# உணவு பரிமாறுவோர் சுகா. பேணல் அவசியம்

## நல்லூர் பிரதேசசபை செயலர் தெரிவிப்பு

''உணவகங்களில் பணி புரிகின்ற உணவு பரிமாறுகின்றவர்கள் சுகாதாரத்தைப் பேணுதல் அவசியம்.

மேற்கண்டவாறு பிரதேச சபைச் செயலாளர் செ. செல்வரத்தினம் தெரிவித்துள்ளார்.

நல்லூர் பிரதேச சபைக்குட்பட்ட உணவகங்களில் கடமை புரிபவர்களுக்கான கலந்துரையாடலில் கொக்குவில் பொது நூலக கேட்போர் கூடத்தில் உரையாற்றும் போது மேற்கண்டவாறு அவர் தெரிவித்தார்.

அவர் மேலும்தெரிவித்துள்ளதாவது; சுகாதாரத்தைப் பேணிக் கடைப்பிடிப்பதன் மூலம் நோய்கள் பரவுவதைத் தடுக்க முடியும்.

உணவுகள் தயாரிக்கின்ற போது கலப்படம் செய்யக் கூடாது.

கலப்படமற்ற போஷாக்கான சுத்தமான உணவைத் தயாரித்து வழங்குவதன் மூலம் வாடிக்கையாளர்கள் அதிகரிப்பதுடன், மக்களின் மனமும் மகிழ்வடையும் எனவும் தெரிவித்தார்.

(செ-103)

# குருநகர் களஞ்சியப்பொறுப்பாளர் பிணையில் செல்ல அனுமதி

(யாழ்ப்பாணம்)

குருநகர் அரச களஞ்சியப் பொறுப்பாளர்ஆர். கதிர்காமநாதன் நேற்று பிணையில் செல்ல நீதவான் இ.த. விக்கினராஜ வினால் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

வவுனியா மேல்நீதிமன்றம் விடுத்த நிபந்தனைக்கமைவாக 25 ஆயிரம் ரூபா காசுப்பிணையில் விடுவிக்கப்பட்டார்,

இவரின் பிணக்காக கிட்டப்பணிப்பாளர் மகாலிங்கமும் உதவித் திட்டமிடல் பணிப்பாளர் நல்லையாவும் நீதிமன்றில்சமுகமளித்திருந்தனர்.

களஞ்சியப் பொறுப்பாளர் ஆர். கதிர்காமநாதனை பிணையில் செல்ல அனுமதித்த போதிலும் யாழ்.நீதவான் தீர்மானிக்கும் வரை தினமும் யாழ்ப்பாணம் பொலிஸ்நிலையத்தில் காலை 9-00 மணிக்குச் சென்று ஒப்பமிடவேண்டும் என்றும் அவர் குடாநாட்டை விட்டு வெளியே றக் கூடாதென்றும் கட்டளை இடுவதுடன், இவ்வழக்கு விசாரணை முடிவுறும் வரை நாட்டிலிருந்து அவரை வெளியே செல்ல அனுமதிக்கக் கூடாதென்றும் குடிவரவு குடியகழ்வுத் திணைக்கள ஆணையாளருக்கு கட்டளை இடுவதாகவும் நீதவான் இ.த. விக்கினராஜா தீர்ப்பளித்துள்ளார். (வ-12)

## பஸ் சேவையை விஸ்தரிக்க கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

அல்லைப்பிட்டியில் வாழும் மக்களின் போக்குவரத்து வசதி கருதி வடபிராந்திய பஸ்சேவையைஅல்லைப்பிட்டி செபஸ்தியார்கோவில் வரை விஸ்தரிக்குமாறு வேலணை பிரதேச சபைத் தலைவர் கருணாகர குருமூர்த்தி கேட்டுள்ளார்.

இது தொடர்பாக அவர் வட பிராந்திய போக்குவரத்து சபையின் பொது முகாமையாளர் எஸ் சொக்கலிங்கத்துக்கு கடிதமொன்றை அனுப்பிவைத்துள்ளார். (ந)

## 38 ஈழ அகதிகள்--

இவர்கள் இரண்டு படகுகள் மூலம் சென்றனர். ஒரு படகில் 10 பெண்கள், 2 குழந்தைகள் உட்பட 25 பேரும், மற்றொரு படகில் 13பேரும் வந்துள்ளதாக காவல் துறையினர் தெரிவித்துள்ளனர். (வ)

## விமான ..

மென யாழ் சிவில் நிர்வாகக் காரியாலயம் அறிவித்துள்ளது.

ஒரு விமான சேவை மட்டுமே இடம் பெறுமெனவும் பயணப் பாதுகாப்பு அனுமதி மற்றும் பயணச் சீட்டு பெற்ற பயணிகள் இன்று காலை 8 மணிக்கு சிங்கள மகாவித்தியாலயத்திற்கு வருமாறு கேட்கப்பட்டுள்ளனர் [இ]

## விமானப்பயண

மேலும் தெரிவித்துள்ளார்.

அதேசமயம் 514 ஆவது இராணுவ பிரிகேட்டைச் சேர்ந்த பொதுமக்கள் தமது பயண பாதுகாப்பு அனுமதியை இன்று பிபகல் 2 மணி முதல் 4 மணி வரை பார்க்க முடியுமெனறும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

## நிலாவெளி---

15) விஜயகுமார் ஜெயகாந்தன் (வயது-18), மற்றும் ஒரு பிள்ளையின் தந்தையான சின்னராசா விஜயகுமார் (வயது-24) ஆகியோரே துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி மரணமடைந்தவர்களாவர். இவர்களின் சடலம் திருமலை வைத்திய சாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

கடற்படையினரின் சூட்டுக்கிலக்காகி உயிரிழந்த அப்பாவி மீனவர்களை விடுதலைப்புலிகளென கையொப்பம் இட்டுத்தரும் பட்சத்திலேயேசடலங்கள் கையளிக்கப்படுமென உயிரிழந்தவர்களின் பெற்றோர்களிடம் பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து நேற்றுக் காலை 7 மணியிலிருந்து மாலை 3 30 மணி வரை கோபாலபுரம் சந்தியில் சுமார் 250ற்கும் அதிகமான பொதுமக்கள் ஒன்று கூடி மறியல் போராட்டம் ஒன்றை நடத்தியுள்ளனர்.

இது குறித்து திருமலை மாவட்ட பதில் நீதவான் எம்.கே. செல்வராசா பூர்வாங்க விசாரணைகளை ஆரம்பித்துள்ளார். (ஸ்ரீ)

## நீதி மன்றில் மனு தாக்கல்

(ஏறாவூர்)

பொது ஜன ஐக்கிய முன்னணியின் திருகோணமலை மாவட்ட எம்.பி. முகமது சரீவ்தௌபீக் எம்.பி பதவியில் இருந்து நீக்கப்பட வேண்டும் என்று கோரிமேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

கடந்த தேர்தலில் பொது ஜன ஐக்கிய முன்னணி சார்பில் போட்டி இட்டுத் தோல்வி அடைந்த உறுப்பினர் ஆரியபொலவல்பீடகம இந்த மனுவைத் தாக்கல் செய்துள்ளார்.

## யாழ்

சாங்கத்தின் பூரண கட்டுப்பாட்டுக்குள் வந்த பின்னர் பொதுமக்களின் அவலங்களைப் போக்கி அவர்களின் அன்றாட பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு நாமும் எமது கட்சியும் இடைவிடாத உன்னத சேவைகளை வழங்கி வருகிறோம்.

இச்சந்தர்ப்பத்தில் எம் மீதும், எமது அமைச்சின் மீதும் பொறுப்புள்ள ஒருசமுதாயத்தைக் கட்டியெழுப்புகின்ற,பெருமையுள்ள, நடுநிலை வகிக்கக்கூடிய பல்கலைக்கழக மாணவர்கள்; சிலரின் தூண்டுதலுக்கு இலக்காகி, அரசியலில் ஈடுபடுகின்ற எம்மீது வீண் பழி சுமத்தி, கட்டுக்கடங்காத வார்த்தைகளை அள்ளிவீசி, எமது மக்களை எம்மிடமிருந்து திசைதிருப்ப முயல்வது மிகவும் தவறான விடயமாகும்.

யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் எதிர்நோக்கும் இன்னல்களைத் தீர்க்கவும், அவர்களுடைய தேவைகளை விரைந்து நிறைவேற்றிவருவதும் யார் என்பதை அவர்கள் சற்று சிந்தித்துப்பார்க்க வேண்டும்.

எமது மக்களின் சுபீட்சமான, நிம்மதியான, கௌரவத்துடனான வாழ்க்கைக்கு ஈ.பி.டி.பியினராகிய நாமும் எமது கட்சித் தலைவரும், அமைச்சருமான கே.என். டக்ளஸ் தேவானந்தாவின் துணிச்சல் மிக்க, தியாகவுள்ளம் பொருந்திய செயற்பாடுகள் முற்றிலும் தவறானதா? மக்கள் மாணவர் சேவைகளில் இணைந்துள்ள எம்மீது அவதூறு, வீண்பழி சுமத்துவது நியாயமானதாகுமா?

கல்வி கற்க வேண்டிய பொன்னான காலத்தில் வீணாக தூண்டுதல்களுக்கு இலக்காகி, வாழ்வைப் பாழாக்கி கல்வியைச்சீரழிக்காது நல்ல பிரஜைகளாக உருவாக விரிவுரையாளர்கள், புத்திஜீவிகள், மாணவர்களின் பெற்றோர்கள் வழிகாட்ட வேண்டியது அவசியமாகும். என்பதுடன் நாடும், மக்களும் வளம்பெற நாமும் அனைவரும் ஒன்றுபட்டு செயற்படுவோமென அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. [இ]

# கிபிர் விமானம்குண்டுவீச்சு

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சி பகுதியில் நேற்று நண்பகல்12 30 மணியளவில் கிபிர் குண்டு வீச்சு விமானங்கள் குண்டுத்தாக்குதலை நடத்தியுள்ளன.

கிபிர் விமானங்களின் இத்தாக்குதல் மறவன்புலோ கோகிலாக்கண்டி, கைதடி, நாவற்குழி, அரியாலை ஆகிய பகுதிகளில் இடம் பெற்றது.

கிபிர் விமானம் யாழ். நகர வான்பரப்பில் தாழப் பறந்ததினால் நண்பகல் நகரின் மத்தியில் சற்றுநேரம் பதற்றம் நிலவியது.

நேற்று முன்தினம், வேவு விமானம் ஒன்று யாழ்.குடாநாட்டு வான்பரப்பில் வேவு பார்த்தமையும் குறிப்பிடத்தக்கது (ம-ஸ்ரீ)

## இனப்பிரச்சினைக்--- வீணாக அலட்டத் தேவையில்லை

சமாதான முயற்சிக்கு இனவாத அமைப்புகள் எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றமை தொடர்பாக பிரிட்டிஷ்வெளிவிவகார அமைச்சர் பீற்றர் ஹெயின் கருத்துத் தெரிவிக்கையில்;

இனவாத அமைப்புக்கள் காட்டிவரும் எதிர்ப்புக்களை பாரதூரமானவை என்று கருத்தில் எடுக்கக்கூடாது. இவர்கள் அரசியலில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளார்கள். இவர்களைப்பற்றி நாம் எதுவும்அலட்டிக் கொள்ளத்தேவையில்லை என்று கூறினார்.

## புலிகளை பிரித்தானிய அரசு தடைசெய்யுமா?

இலங்கை இனியும் யுத்தத்தைத் தாங்கிக்கொள்ள முடியாத நிலையில் தற்போது உள்ளது. யுத்தத்தினால் இலங்கையின் பொருளாதாரம் மிகவும் சீரழிந்த நிலையில் காணப்படுகிறது. இது நாட்டின் அபிவிருத்திக்கு உகந்ததல்ல.

விடுதலைப் புலிகள் அமைப்பினை பிரித்தாணியாவில் தடைசெய்யுமாறு இலங்கை கோரியது தொடர்பாக செய்தியாளர்களின் கேள்விகளுக்குப் பதில் அளித்த பிரிட்டிஷ் வெளிவிவகார அமைச்சர் பீற்றர் ஹெய்ன் இதுசம்மந்தமாக தனக்கு ஒன்றும் தெரியாது என்றும், இந்த விடயம் எனது கடமை அல்ல. இதுகுறித்து பிரித்தானிய உள்விவகார அமைச்சே தீர்மானிக்க வேண்டும்.

பிரித்தானியாவில் தடை செய்யப்பட வேண்டிய அமைப்புக்களின் பட்டியல் தயாரிக்கப்படுகிறது என்றும், புலிகளைத்தடை செய்வதா? இல்லையா? என்பது குறித்து அரசே முடிவெடுக்கும்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரனின் மாவீரர்தின உரையில் அவரின் நிலைப்பாடு உலகிற்கும், அரசிற்கும் தெரியவரும் என்றும் அவர் சொன்னார்.

## நோர்வேயின் சமாதான முயற்சியை பிரித்தானியா வரவேற்கிறது

பிரித்தானியா இலங்கைப் பிரச்சினைக்கு மத்தியஸ்தம் செய்ய விரும்பவில்லை.... நோர்வேயின் முயற்சியினை வரவேற்பதுடன், அதனை ஊக்குவிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை பிரித்தானியா எடுக்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

பிரிட்டிஷ் வெளிவிவகார அமைச்சர் பிரதமர்ரட்ணசிறி விக்கிரம நாயக்கா,வெளிவிவகாரஅமைச்சர் லஷ்மன் கதிர்காமர், உட்பட 15 அமைச்சர்களையும். எதிர்க்கட்சித் தலைவர் ரணில்விக்கிரமசிங்காவையும் மற்றும் அரசாங்க, எதிர்க்கட்சி பிரதிநிதிகளையும்சந்தித்துப் பேசியுள்ளார்.

அமைச்சர் பீற்றர் ஹெயின் நேற்று பாராளுமன்ற கூட்ட நடவடிக்கைகளையும் நேரில் சென்று அவதானித்தார்.

## பிரிட்டிஷ் அமைச்சரிடம் ரணில் உறுதி மொழி

இதேவேளை அரசாங்கம் இனப்பிரச்சினை தொடர்பாக எடுத்துவரும் சாமதான முயற்சிகளுக்கு எதிர்க் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி பூரண அதரவை அளித்து வரும் எனவும் முட்டுக்கட்டையக இருக்க மாட்டோம் என்று பீற்றர் ஹெய்னிடம் ரணில் உறுதி அளித்துள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (வ)

## வன்னி

விடப்பட்டுள்ளதாகவும், மாவீரர் வளைவுகள் அமைக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதே வேளை முள்ளியவளைப்பகுதியில் மாவீரரின் பெற்றோர்கள் கௌரவிக்கப்பட்டதுடன், மாவீரர் நினைவாக தென்னங்கன்றுகளும் அன்பளிப்பாக வழங்கப்பட்டன. (ம)

## ரெலோ.

அடுத்த மாதம் 11ஆம் திகதி நீதிமன்றில் ஆஜராக வேண்டும் என்றும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது:

கைது செய்யப்பட்ட 11 பேரில் 9பேர் ரெலோவின் முழுநேர உறுப்பினர்கள் என்றும் இருவர் பொதுமக்கள் எனவும் தெரிவிக்கப்பட்டது.

இவ் வழக்கில் சட்டத்தரணி சிறிகாந்தா எதிராளிகளுக்காக வாதாடினார். (வ)

## மூதூரில்---

காயங்களுக்குள்ளாகியதால் படகு மூலம் கொண்டு செல்லப்பட்டு திருகோணமலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் மூவரின் நிலை கவலைக்கிடமாகவுள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள்தெரிவித்துள்ளன.

இதேவேளை இறந்த, காயமடைந்த அனைவரும் முஸ்லிம்கள் எனவும் தெரிய வந்துள்ளது. (இ)

## நோர்வேயின்--

வே.பிரபாகரனுடனும் நடாத்திய பேச்சுவார்த்தையில், அடங்கிய முக்கிய விடயங்களை இந்தியத் தலைவர்களுக்கு எடுத்து விளக்குவதே மேற்படி பயணத்தின் நோக்கமென்று தெரிய வந்துள்ளது

இதேவேளை இலங்கையின் இனப்பிரச்சினை தீர்வில் இந்தியாவின் நியாயமான நலன்கள் முதன்மையாக கொள்ளப்படும் அத்துடன் அவர்களின் அனுசரணையுடனேயே தீர்வு அமைவது அவசியமானது என்று எரிக் ஷேல் ஹைய்ம் தெரிவித்துள்ளமை அவர்களின் இந்திய விஜயத்தின் முக்கியத்தை வெளிப்படுத்துகிறது.

இந்தியாவுக்கு விஜயம் மேற்கொண்டுள்ள குழுவினரில் நோர்வே வெளிவிவகார அமைச்சர் றேமன் ஜோன்சனும் ஒருவர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கதாகும். [உ-இ]


## மரண அறிவித்தல்

### அருணாசலம் ஆறுமுகம்

மீசாலை வடக்கைப் பிறப்பிடமாகவும் சாவகச்சேரி தாமோதரம்பிள்ளை வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட சமாதான நீதவான் அருணாசலம் ஆறுமுகம் அவர்கள் 23.11 2000 வியாழனன்று காலமானார். அன்னார் சாவகச்சேரி ஆரம்ப பாடசாலை முன்னாள் உப அதிபரும், சாவகச்சேரி கிராமசபை முன்னாள் தலைவரும், சாவகச்சேரி ப நோ.கூ. சங்க முன்னாள் இயக்குநர் சபை உறுப்பினரும், சாவகச்சேரி ஓய்வூதியர் சங்க முன்னாள் தலைவரும், இளைப்பாறிய ஆசிரியை அன்னம்மா அவர்களது அன்புக்கணவரும், ஜெயபாலன் (சமாதான நீதவான் யாழ்ப்பாண வீதி அபிவிருத்தி அதிகார சபை ஒப்பந்தக்காரர்) ஜெயககுமாரன (யாழ்ப்பாணம் பளைப்பிரிவு வீதி அபிவிருத்தி அதிகார சபை) ஜெயராணி, ஜெயதேவன் ஜோ்மனி) ஜெயமணி (கனடா) ஜெயலட்சுமி (ஜேர்மனி) ஜெயகாந்தன் (நோர்வே) ஆகியோரின் அன்புத் தந்தையாரும், மீனலோஜினி, பரமநாதன் (இலங்கைவங்கி சாவகச்சேரி) தவமலர் (அதிபர், கப்புதூ ஏகாம்பர வித்.) பவா (ஜேர்மனி) பத்மநாதன் (ஜேர்மனி) இந்திரகுமார் (கனடா) வாசுகி (நோர்வே) ஆகியோரின் அன்பு மாமனாரும், கீதா, நிசாந்தன் நிரஞ்சன், விஜிதா, நிலுஜா, அனுஷன், நிரோஜன் சேபிகா, வைஷ்ணா, செந்தூரன், ஜீவி, பவித், வாகீசன், மதுரா, சங்கீத், றொபின, சானகா, சர்மிஷா, ஆகியோரின். அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 23.11.2000 அன்று கப்புதூவில் நடைபெற்றது. உற்றார் உறவினர், நண்பர்கள இதனை ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

தகவல்
ஆ. ஜெயபாலன் (மகன்)
(1948)



ஸ்ரீசெல்வா
(யாழ்ப்பாணம்)
சத்தியராஜ்
அருண்பாண்டியன்
றோஜா,மணிவண்ணன்
நடிப்பில்
புரட்சிக்காரன்
நேரடி CD
10.30,2.30 (ப.நேரம்)
[கி-688]


இப்பத்திரிகை ''வலம்புரி'' அன் கோ ஸ்தாபனத்தினரால் இல. 15, வெள்ளாந்தெரு. யாழ்ப்பாணம் எனும்விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2000 ஆம்ஆண்டு நவம்பர் மாதம் 24ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.